பிரக்ஞானம் பிரம்மம்



pax.ravichandra@gmail.com

Pax Ravichandra

29-1-2024

சத்திய தரிசனம்	
பிரக்ஞானம் பிரம்மம்	
எண்	பெயர்
1	மெய்காட்சி
2	மெய்யறிவு
3	மின்சாரப்பூக்கள்- கோலங்கள்
4	முகவரியில்லா ஏழைகள்
5	முரண்பாடு
6	நான் யார்?
7	நலமும் வரமும்
8	நந்தி
9	நானும், அவனும்
10	நத்தார் மரம்
11	நத்தார் ஒரு வணிக விழா
12	நத்தார்
13	அகதிகளின் நத்தார்
14	நீ வருவாய் என நான் இருந்தேன்
15	நெஞ்சம் கோயிலாக
16	நொருங்கிய மனம்
17	பாவி
18	படைத்தல்
19	பக்தன்
20	பழைய ஏற்பாடு

எண்	பெயர்
21	பாலியலும், பரிசுத்த வேதாகமும்
22	பசி
23	பசியும்- பாவமும்
24	பாட்டும் நானே
25	பயணம்
26	பெண்மை
27	பேதங்கள்
28	பிழை பொறுப்பாய்
29	பிரபஞ்சக் கோலம்
30	பொன் கன்று
31	பூஜை
32	போரும், அமைதியும்
33	பிரக்ஞானம் பிரம்மம்
34	புதிய போதகர் லாசர்
35	புயலும், சிலையும்
36	சாதுவும் சீடரும்
37	சாரமற்ற உப்பு
38	சத்தியம், சிவம், சுந்தரம்
39	சத்திய தரிசனம்
40	சத்திய வேள்வி

மெய்க் காட்சி

உன் திருமுகம் காணும்போதெல்லாம்-
பூவாய் மலர்கின்றேன்-அப்பா
உன் திருமொழி கேட்கும்போதெல்லாம்
கோகிலமாய் கரைகின்றேன் அநாதை நான்
உன் அன்பில் குழந்தையாகின்றேன்

ஆதியும் அந்தமுமில்லா அன்புருவே
நாதியில்லாத ஏழை என்னையும் நாளும்-உன் நாமம்
ஓதி மகிழ்ந்திட உயர் நிலையீந்தாய்-பாவி என்னையும்
உன் மகனென மொழிந்தே என்னைப் போற்றினாய்

நீர் ஊறும் விழிகள் நிறம்மாறிச் சிவப்பேற, தேனூறும் மலர்கள
கைத்தலமமர்ந்து திருத்தலம் நோக்கித் தவமிருக்க
வேராய், விழுதாய் தாங்குபவர் திருத்தாள் நோக்கி மெய்பணிய,
“உள்ளுறைய வருவாய் உயிரே” என உள்ளம் உருகிக் கசிந்ததே

மெய்யுறையும் தேவனை-ஆன்ம இரட்சகரை
பொய்யாய்ப் புறம் தேடி அலைந்த மூடன் யான்
நெய்யுறை விளக்கின் நீங்காச் சுடரை-
உள்ளுறையக் கண்டு உவகை கொண்ட பக்தன் நான்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14-07-2023

மெய்யறிவு

நம்முள் இருக்கும் உன்னதமே இறைவன்
நம்மை நாம் அறிந்தால் சச்சித் ஆனந்தம்
மெய்யறிவே ஞானம், நிர்வாணம்

பகுதியை சார்ந்தது முழுமை, முழுமையை சார்ந்தது பகுதி
முழுமையும் தனியாகச் சுதந்தரமாயில்லை
பகுதியும் தனியாகச் சுதந்தரமாயில்லை

கலைஞனும்,குழலும் இல்லாமல் இசை இல்லை
கானமிசைக்க-இறைவன் வெற்றுப் புல்லாங்குழல் தேடுகின்றான்
பூத்துக் குலுங்கும் மலர்களுமாய் , பாடி மகிழும் புள்ளினமாய்
தனித்து வாழ முடியாத இறைவன், அன்பினால் இன்புற்று
தன்னையே பலவாய்ப் படைக்கின்றான்

அன்பே படைக்கும், படைப்பெல்லாம் இறையன்பின் சாயல்
மண்ணால் மனிதனை உருவாக்கி-தன் மூச்சால்
உயிர் கொடுத்த இறைவன்-படைப்பாய் தன்
அன்பைப் பகிரும் இறைவன்




அன்பின் இரு நிலைகளாய் ***நான் –அது***
அதுவானது அசையும் சொத்தாக
அதுவோ அன்பின் இழிநிலை

நான்– நீ என்பது இருமையைப் படைக்க
இரு உள்ளங்களின அன்பு நிலையோ
வெகு சாதாரணமானது

நான் அல்ல நீ என்பதே
தெய்வீகக் காதல்-பூரண சரணாகதி
நீ எனச் சொல்ல
நான் எனும் நிலையிலும் ஆணவம்

நானும் இல்லை நீயும் இல்லை என்ற
நிலையில் -வெறுமை-அதுவே
சூனியமும், பரிபூரணமுமான முழுமை

நான்-அது எனும் நிலையில் உடல்களின் சங்கமம்
நான் -நீ எனும் நிலையில் மனங்களின் சங்கமம்
நான் அல்ல நீ எனும் நிலையில் ஆன்மாக்களின் சங்கமம்
நானும் இல்லை நீயும் இல்லை எனும் நிலையில்
சூனியத்தின் தரிசனம் “இதுவே சாஸென்”



கடவுளும் இல்லை, ஆன்மாவும் இல்லை
பிராத்தனை இல்லை
அன்பு தன் எல்லைகளைத் துறந்துவிட்டால்
உண்மையைச் சென்றடையும்.-கபீர் பாடுகின்றார்

உறவிற்கு இருவர் தேவை, இருமை மறைந்த நிலையில்
இருப்பது அன்பு மட்டுமே
கடவுளும் இல்லை, மனிதனும் இல்லை
ஆன்மா இல்லை

சும்மாயிருத்தல் சுகம் எனும் நிலை
அதுவே பௌத்தத்தின் தெய்வீக நிலை
மௌனத்திற்கு ஏது வார்த்தை

நாம் அறிந்தது மனம்-அறியாதது கடவுள்
நான் என்பதே பந்தம்
பந்தம் துறந்திட இன்பம் மலர்ந்திடும்.
பரவசம் கொள்ளுங்கள்

இறைவன் நம்முள் இருக்கும் உன்னதம்
அறிந்தால் நம்மை நாம் நேசிப்போம்
அயலவரை நாம் நேசிப்போம்
தேடுங்கள் கண்டடைவீர்கள்-நம்மை
இயேசு கடவுளாக வேண்டுகின்றார்.

அன்பு மனங்களையே இறைவன் வேண்டுகின்றான்
அன்பே சொர்க்கம், அதுவே இறையரசு
மனம் கழிய இதயம் மலர்கின்றது வீடு தெரிகின்றது
அன்பின் வாசம் மணக்கின்றதா?

இறைவன் பேசுவதற்கு செவிமடுப்பதே வழிபாடு
அன்பால் பூத்து கொண்டாடும் இதயத்தின் மொழியே ஜெபம்
சத்தியத்தின் சாட்சிகளுக்கே சிலுவை மரணம்
அவர்களே உயிர்த்தெழுவார்-அதுவே வீடுபேறு

மதம் ஒரு காதல் கதை-இறைவனும்
மனிதனும் கொள்ளும் அன்பின் நிலையே-
காதல் கலையே மதம்.
அனுபவம் தாண்டிய உணர்வே இறைவன்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-13-07-2023

மின்சாரப் பூக்கள்

சாலையோரத்து மின்சாரப் பூக்கள் ஒளிசிந்தி மலர்ந்திட
ஒளித்தேனைச் சுவைக்க ஈசல்கள் மொய்க்கும்
வழிந்தோடும் வெளிச்சத்தில் நெடுஞ்சாலைகள் ஒளிரும்

கிளையில்லாத, இலையில்லாத ஒற்றை மரக் கம்பத்தில்
ஒவ்வோர் இரவும் மின்சாரப் பூ மலரும்

மழை மத்தளம் கொட்டிட, தவளைகள்
இசைக் கச்சேரி அரங்கேர வாசமில்லாப் பூக்களோ
வழிகாட்டும் போதி விருட்சங்கள்
ஞான ஒளி தாங்கிய புதிய புத்தர்கள்.

கோலங்கள்

வரும்போது மகிழ்ந்து பிறப்பென்றோம்
போகும்போது -அழுது இறப்பென்றோம்
சத்திய யாத்திரையில் இறங்கி,இடம் மாறும்
இடங்களுக்கு ஏனிந்த உணர்வின் நெகிழ்ச்சிகளோ?

உண்மையின் தேடலில் எல்லோரும் புனித யாத்ரீகரே
ஓரடி எடுத்தவரும் உண்மையோடு ஒன்றானவரும்
தேவனின் குழந்தைகளே.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-15-07-2023

முகவரியில்லாத ஏழைகள்.

இறைச்சிக் கோழிகளும் உண்டு குடித்து கொழுத்திருக்க
ஏழைகளோ ஒரு வேளை உணவிற்காய்-கோழிகள்போல்
குப்பைகள் கிளறும் அவலங்களுமிங்கே
கையேந்திப் பிச்சை கேட்கும் துயரங்களுமிங்கே

நாளும் ஒரு பூங்கிண்ணத்தில் தேனீக்கள் அமுதருந்தும்
தினமும் ஒரு பழமரத்தில் கிளிகள் பசியாற்றும்
நரிகளுக்கு வளைகளும், ஆகாயத்துப் பறவைகளுக்கு
கூடுகளுமிருக்க, நடைபாதைகளில் கூடு கட்டி
பிச்சைக்கும், எச்சில் இலைகளுக்கும் போராடும் ஏழைகள்
இறைவனின் குழந்தைகளோ?

செல்வர்கள் நாளும் விருந்துண்டு மகிழ்ந்திருக்க-பிச்சைக்கும்,
எச்சில் இலைகளுக்கும் வழியில்லாத ஏழைக்கு-இலாசர் பெயரும்,
செல்வன் வீட்டு வாயிற்படி முகவரியும் ஏனோ?

நாளும் பட்டுடுத்தி நண்பர்களோடு விருந்தாடும்
அநாமதேய செல்வர் சொத்தைப் பகிர்ந்தளிக்கும்
பொதுவுடைமை, கம்யூனிஸ தோழனாய் நீயிருப்பாய்
ஏழை இலாசர் என் நம்பிக்கை பொய்யானதே!

வாழும்போது ஏதுமில்லாத ஏழைகளுக்கு
"இறந்தபின்" ஆபிரகாம் மடியும், சொர்க்கமும்
எதற்கு?, ஏழை எம் வாழ்வோ நாளும் கல்வாரிப் பலி

பிறக்கும்போது வீடும், தொட்டிலுமில்லாத ஏழை
இறக்கும்போது கல்லறை இல்லாத நாடோடி உன்னை,
கசையால் வதைத்து செஞ்சட்டைகாரனாக்கி-கச்சையோடு
கழுமரத்தில் தொங்கவிட்டுக் கொன்றவரோ செல்வர்

தலைசாய்க வளையும் கூடுமில்லாத் துறவியே
நடைபாதையில் வாழும் நான் வேளை வந்தவுடன் போய்விட
காடு தவிர வீடில்லை-ஆனால் உம் தந்தையின் வீட்டில்
அநேக உறைவிடங்கள் உண்டென்றால் பெருஞ்செல்வர் நீர்

ஏழைகளுக்கும், எளிய உள்ளத்தவர்க்கும் இலவசம் என்றால்
கவலையில்லை, ஆயினும் உன் உலகில் எல்லாமுள்ள நீயும்
முதலாளிவர்க்கம் என்றால்-ஏழை நான் எங்கு போவது?-அங்கும்
நடைபாதை வாழ்வும், வாழ்வாதாரமாய்ப் பிச்சையுமோ?

ஏழ்மை தீர ஏது வழி உலகில், இருப்பதை
பகிர்வதிலும் உழைத்துப் பிழைக்க தொழில் இருந்தால்
ஆறுமே என் வயிற்றுப் பசி, நீ சொல்வதை நம்பினால்
என் பசி போகுமோ?, மனக் காயமும் ஆறுமோ?

கோஷங்களுக்கும்-செபங்களுக்கும் கொள்கையில்தான்
எத்தனை ஒற்றுமை? முன்னையதோ உரிமையின் முழக்கம்?
பின்னையதோ ஏழ்மையின் கலக்கம்?-இல்லை
நம்பிக்கையின் மயக்கமா இறைமகனே சொல்?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-15-07-2023

முரண்பாடுகள்

நான் "நானாக" இருப்பதையும்
நீ "நீயாக" இருப்பதையும்
நம் மனங்கள் ஏனோ ஏற்கவில்லை
அன்பு ஆக்கிரமிப்பானபோது- நட்பில்
உரசல்கள், நெஞ்சில் காயங்கள்

அகங்காரத்தின் உராய்வுகள்
காதல் நெஞ்சைக் காயப்படுத்தியபோது
நெஞ்சில் தேவதாஸின் துயரங்கள்
பார்வதியின் கண்ணீர் அருவிகள்

என்னை இழந்தேன், நான் இல்லை
இருப்பது நீ மட்டும்தான் என்று அறிந்தே-பார்வதி
மீண்டும் உன் இதயக் கதவைத் தட்டினேன்

யாரென்றாய்?, நீயே என்று பதிலுரைத்தேன்
கதவு மெல்லத் திறந்திட எங்கும் இன்பமயம்
இருவரல்ல ஒருவரென்ற அனுபூதியில்
அர்த்தநாரிஸ்வரர் தத்துவம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-15-07-2023

நான் யார்?

அந்தகன் யார்?, அங்கவீனன் யார்?
ஊமை யார்?, செவிடு யார்?
ஓயாத கேள்விகள் என் நெஞ்சைத் துளைக்க
அகக்குருடு அறியாதவனே அந்தகன்
சத்தியத்திற்கு செவி கொடாதவனோ செவிடன்
உண்மையின் வழி நடவாதவனே முடவன்

அன்பை பகிராதவனோ ஏழை, அறிவைப்
பகிராதவனோ கோழை. கருணையற்றவனோ
மூர்க்கன், ஆணவம் கொண்டவனே மூடன்,
தன்னை அறிந்தவனோ ஞானி

துறவிக்கு வேந்தனும் துரும்பு,
பற்றறுத்தவனுக்கே சுதந்திரம்
விழிப்புணர்வே சந்நியாசம்,
அன்பே சிவம், வாழ்வோ தவம்

நான் என்று ஏதுமில்லை? எல்லாம்
ஆணவத்தின் மாய நிலை?
சுய உணர்வும், உணர்வற்ற நிலையுமாய்,
இருளும், ஒளியுமாய்-இருமை

உன்னதங்களில் இறைவனுக்கு மகிமை-உலகில்
நல்மனத்தவருக்கே அமைதி-நற்செய்தி
உன்னதமும், நன்மனதும் ஒன்றே-நம்முள்ளே

தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம்
ஏளிய மனத்தவருக்கே இறையரசு-சத்தியம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-24-06-2023

நலமும் வரமும்

நீர் விரும்பினால் என்னை நலமாக்ககூடும்-வரம் பெற்று
நலமடைந்த தொழுநோயாளி-ஆண்டவரே
எங்கள் மேல் இரக்கமாயிரும் கூவி
நலம் பெற்றவர்களோ பத்து தொழுநோயாளர்

இயேசுவே , தாவீதின் மகனே எங்கள் மேல் இரக்கமாயிரும்
தெருவோரத்தில் பிச்சை ஏற்று வாழ்ந்த அந்தகரும்
ஆண்டவனை கூவி நலம் பெற்றார்

இருந்த செல்வமெல்லாம் நலம் நாடி அழிய
நம்பிக்கை வரமாக, குணம் பெற-போதகரின் ஆடை விளிம்பைத்
தொட்டவளும் குணமடைந்தாள் அமைதி கண்டாள்

கண்ணீரால் பாதங்களைக் கழுவி
நறுமண தைலம் பூசி, கூந்தலால் துடைத்து
அன்பைச் சொன்ன விலைமகளும்
இறை கருணையினால் வீடு கொண்டாள்

நிலை வாழ்விற்கு வழி கேட்ட நிலக்கிழாரும்-
பற்றால் நிலை வாழ்விழந்தார்

தலைமைக் குருக்களும், திருச்சங்கமும்
இறை நிந்தை புரிந்தாரென்று குற்றம் சுமத்தினார்
பிலாத்துவை மிரட்டி இயேசுவைக் கொன்றார்

உண்மையின் சாட்சியம் உயிரோடு முன்னிருந்தும்
உண்மையா அது என்ன? அகக்குருடனாய்
கேலிசெய்த ஆளுனன் இரத்தப் பழிக்கஞ்சி,
கைகழுவி, நீதி நெறி தவறிய பதவி காத்த அண்ணகன்

திருடனாய் வாழ்ந்து, நிலையற்ற செல்வம் தேடி-
தன் நிலையை சிலுவையில் அறிந்த கள்வன் டைஸ்மஸ்
உம் இராஜ்சியத்தில் நீர் வரும்போது என்னை நினைந்தருளும்
சிலுவையில் தொங்குபவரிடம் யாசித்ததோ பெரு வரம்

வாழ உயிர் கேட்கவில்லை, வலி நீங்க வழி கேட்கவில்லை
தப்பி வாழ முறை கேட்கவில்லை, ஆண்டவரே அடியவனை
நினைவுகூரும் வேண்டுதலானது-“இன்று நீ என் கூட
பரகதியில் இருப்பாய்” அக்கணமே வரமானது

ஆழ்ந்த விசுவாசத்தில் கள்வன் கேட்ட வரம் நெஞ்சைத் தொட
கருணையோடு இறைமகன் ஈந்த வரம் பெரிது.

அறியாதோர் ஆன்மா களையும் உடலை,
இறப்பாய் எண்ணிப் புலம்பியழுகின்றார்
ஆன்மாவிற்கு அழிவில்லை அறிந்தவருக்கு
இயேசு இறக்க வில்லை, விதை மடிந்து முளை எழுந்தது
உள்ளுணர்வில் உன்னதம் மலர்ந்தது.

கள்வனுக்கும் உள்ளுணர்வில் உயர் பூத்தல் வரமானது
சச்சித் ஆனந்தம் அருளானது
மரிக்கும் நிலையிலும் மனுமகனை இரட்சகனாய் கண்ட
கள்வர் விசுவாசம் பெரிது-கேட்ட
வரமோ அரிதிலும் அரிது.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-15-07-2023

நந்தி

எல்லையில்லாத இருப்பே பிரம்மம்
எங்கும் நிறைந்த இறை தன்மையாய் அது
சிவமாய் அது-சிவமே அது

எல்லையில்லாக் காத்திருத்தலாய்-இறை வாயிலில்
விழிப்புணர்வோடு, நந்தியின் இருப்பு அழகிய தவம்
சிவா வருவார் என்ற நிலை கடந்து, காலம் கழித்த
நிகழ்காலத்தில் நிலைத்த காத்திருத்தலாய் அது.

இருத்தலுக்கான செவிமடுத்தல், சொல்வதற்கு
ஒன்றுமில்லை,செவிமடுத்தலே இரகசியம்
முழு விழிப்புணர்வோடு, உயிர்த்துடிப்போடு
கூடிய இருப்பாய் நந்தி

இறைவார்த்தைக்கு செவிமடுப்பதே ஜெபம் -தூய மனதில்
இறை வார்த்தையின் விதைபிற்கான நிகழ்வே தியானம்.

சும்மா காத்திருத்தல், ஏற்றுக்கொள்ளுதற்கான சாரமே
வேண்டுதலின்றி-எதிர்பார்ப்பின்றி, எதிர் நோக்கு இன்றி-
மனம் கழித்து செயலழித்து விழிப்பு நிலையில்
சும்மா இருக்கும் சுக நிலையே தியானம

அமைதியில் திளைத்து, ஆனந்த மௌனத்தில் கலந்து-
மனமழிய, நான் என்ற ஆணவ நிலையழிய,
மோனத் தவத்தில் விழித்தே நிலைத்து, காலம் கழிந்த
நிகழ்காலத்தில் நிலைத்து, வருவார் பெருமான் சிவன்
எதிர்பார்ப்பின்றி சும்மா காத்திருத்தலாய் நந்தியின் இருப்பு

மெய் கழித்து இயல்பாய், எழிலாய் ஓய்வாய் இருத்தல் அருந்தவமே,
ஆத்மா பரமாத்வோடு சங்கமிக்கும் அரிய நிகழ்வே
ஆனந்த தியானம்., அதுவே நந்தியின் ஆனந்தக் கோலம்.
இறைவாயிலில் பக்தி யோகத்தால் நந்தியிட்ட தியானக் கோலம்
புரிந்தவர் அறிந்தார்-புரியாதவர் புராணக் கதை கூறி மகிழ்ந்தார்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-26-06-2023

நானும் அவனும்

நான் யார்?, என் பெயர் என்ன? எல்லாம் மறந்துபோனேன்
நாளும் மாறிடும் ரூபத்தை கண்ணாடியில் காண்பவன்
என் சுயரூபத்தை காண-என்னுள்
சாட்சியாய் வாழ்பவனை அறியச் சும்மா இருந்தேன்

சுகம் கண்டு களித்தேன், ஆனந்தக் களிப்படைந்தேன்.
ஒரு கணத்தில் தோன்றி மறைந்த-தூய அறிவு
பிரக்ஞானம் பிரம்மம் என்றே ஓதியது.
தத்துவமஸி என்றே கூறியது.

ஒரு நாமும், ரூபமும் இல்லாதவனுக்கு
பல்லாயிரம் நாமாவாளிகள், பல நூறு தோற்றங்கள்.
தன் சாயலாய் என்னைப் படைத்து
தனதாவியை ஊதி உயிர் தந்தவனோ இறைவன்

உள்ளம் அவன் கோயிலாக-ஆணவ
"நான்" குடியேறி- முழுமையை மறைத்திட,
மண், பெண், பொன், புகழை பொன்மானைாய் தேடி
ஏமாந்த மூடன்

சிப்பிகளைப் பொறுக்கிச் சேர்த்தவனுக்கு-ஆழ்கடல்
முத்துக்களைக் காட்டினான்-உலகை ஆள
நினைத்தவனுக்கு தன்னை ஆள வழி காட்டினான்
அன்பு இறைவன், மெய்யப்பன்

எதுவும் எனக்குச் சொந்தமில்லை-ஆணவத்தை
அறிந்து தெளிய, "நான்" கழித்து மனம் அழிய
சச்சித்தானந்தமாய் போனேன்.

அவன் கட்டிய வீட்டில் அவன் வாழ வாழ்வு புனிதமானது-
நானல்ல நீயே என்பது நிதரிசனமானது.
தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம் நிதரிசனமானது
வாழ்வின் ஆழ்ந்த அர்த்தம் அவனருளால் புரிந்தது
பூரண சரணாகதியே வழி-தெளிவானது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-26-06-2023

நத்தார்-மரம்

இயேசுவின் பிறப்பு வருடந்தோறும் கொண்டாட
வந்து போகும் திருவிழா அல்ல
நம்முள் இயேசு பிறந்திட இயேசு உணர்வில்-புதிதாய்
நாம் மலர்ந்திடக் கிடைக்கும் அழைப்பு

கடும் குளிரைத் தாங்கி பைன் மரம் -
துன்பக் காற்றில் விழுந்து விடாது நிற்கின்றது-
வாழ்வில் துன்பச் சுமைகளைத் தாங்கிடும்
பைன் மரம் நாமே

மானுடரை ஒன்றுசேர அழைக்கும் மணியோசை
ஒற்றுமைக்காய் குரல் கொடுக்கின்றது.
மணியும் நாமே நல் நாதமும் நாமே
-
ஏற்றிய தீபங்கள்-இருளைப் போக்கி
இரக்கம், பொறுமை, மகிழ்ச்சி, தாராள உள்ளம் என
வாழ்க்கைப் பாதையில் ஒளியேற்றி அனைவரும்
மகிழ்ந்து பயணிக்க நம்மை அழைக்கின்றன.

உன்னதங்களில் இறைவனுக்கு மகிமையும்-
உலகில் நல் மனத்தவருக்கு அமைதியும் உண்டாகுக
அன்பு, அமைதி, நீதி, ஒற்றுமை நம் வாழ்வாக
அமைதிக்கு குரல் கொடுக்கும்-வானதூதராய் நாமே

இறைமகன் இருப்பிடத்திற்கு வழி காட்டும்
விண்மீனும் நாமே, இறைவனை பிறர் நம்மில் காண
அழைத்துச்செல்லும் வாழ்க்கை எமதே.

ஞானிகளும் நாமே, நம்மிடம் உள்ள மேலானதை
இறைவனுக்களித்து மகிழ்வோம்.
இருப்பதை இல்லாதவரோடு பகிர்ந்து
ஏழையரை மகிழ்விப்போம்.

நத்தார் பரிசும் நாமே, நம் அன்பை பகிர்ந்து-
உண்மைக்கு சாட்சியம் பகிர்ந்து உலகுய்ய வழி சமைப்போம்.

நத்தார் வாழ்த்தும் நாமே, மன்னிப்பை வழங்கி-
சமாதானத்தை நிலைநாட்டி, துன்பத்தை மகிழ்வோடு தாங்கி
அனைவரையும் வாழவைப்போம்.

நத்தார் உணவும் நாமே, அன்பை பகிர்ந்து-
தனிமையில் வாழ்வோர் அன்புப் பசி தணிப்போம்.

நத்தார் இரவும் நாமே
ஆணவமழிந்து தாழ்சியுள்ளோராய்
தூய மனத்தோராய் வாழ்வோம்

இயேசு உணர்வு நம்முள் மலர்ந்திட, குழந்தை இயேசுவாய்
நாம் பிறப்பதே, நம்மில் இறையாட்சி மலர்வதே
மெய்யான நத்தார்.
ஏனையவை வெற்று கொண்டாட்டங்களே.
புத்தாடையும், பரிசும், பட்டாசும்
கொண்டு கொண்டாடும் களியாட்டங்களே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-15-07-2023

நத்தார் ஒரு வணிக விழா

இல்லங்களும், சத்திரங்களும் இல்லை, இடமில்லை எனச் சொல்லி
கதவுகளைத் தாளிட கல்லாய், காடாய், முள்ளாய் மாறிட்ட
மானுடம் வாழும் உலகில், தொழுவமே-உன் பிறப்பிடமானது.

ஆடிடத் தொட்டிலின்றி நீ பிறந்தாய்
அடங்கிட கல்லறையின்றி நீயோ மரித்தாய்

அன்று பிறந்திட உனக்கோர் இடமில்லை
இன்றோ நத்தாரை கொண்டாடாத நாடில்லை
மானுடத்தில் மனமாற்றமில்லை.

நத்தரோ, வர்தக, விடுமுறை நாளாய் மாறிட
வெற்றுக் கொண்டாட்டங்களுக்குப் பஞ்சமில்லை-
வியாபாரத்திற்கும், ஆரவாரங்களுக்கு குறைவில்லை

உன்னதங்களில் இறைவனுக்கு மகிமையும்
உலகில்-நல்மனத்தவருக்கு அமைதியும்
கிட்டும் நாள்தான் கிறிஸ்து பிறக்கும் நாள்

மன மாற்றத்தின் அழைப்பு செல்லாக் காசாகிட
உம் பிறப்பும் வெற்றுக் கொண்டாட்டமாய் மாறிட
சாரமிழந்த உப்பாய்- ஒளியிழந்த விளக்காய்
மானுடர் வாழ்வு

நடைப்பிண வாழ்வில் உதயமில்லை, இருள் சூழ்ந்த
வாழ்வே பெரும் தொல்லை, அகதிகளின் கண்ணீரில்
கொரோனாவின் அச்சத்தில், வானவரோடு சேர்ந்திசைக்க
ஏழை இதயங்களில் ஆனந்தக் கீதமில்லை

வறுமையும், பசியும், பீதியும் அச்சுறுத்த
அகதி முகாம்களில் பிறந்து, அநாதைகளாய்
மடியும் நாமும் இயேசுவே நீர்தானோ
உம் இரண்டாம் வருகை இதுதானோ?

தொழுவத்தில் தொடங்கி கழுமரம் வரை உண்மைக்கான
உம் ஆன்மீக் கிளர்ச்சி- பொய்மைக்கு அச்சுறுத்தலானது,
வாதைகளால் உன் மேனியை சிவப்பாக்கி , உன்னை
"***செஞ்சட்டைகாரனாக்கி***"
முதலாளி வர்க்கம் பழி தீர்த்தது

இன்று திறந்த பொருளாதார சந்தையில் சிறந்த முதலீடாய்
உன் பிறந்த நாள் மாறிட நத்தாரைப் பெருவிழாவாக்கி
ஏழைகளைச் சுரண்டுது வழிபாடானது

உன் வாழ்வும் போதனையும் இன்றும்
அன்பின் வேதமே-இன்றும்
தொழிலாளவர்க்கத்தின் கீதமே

கசையால் வதைத்து, முள்ளால் முடிசூட்டி, ஆணிகளால்
கழுமரத்தில் தொங்கிவிட்டும், கருணயால் மன்னிப்பை
வேண்டி, இறையன்பை நீ சொல்லிக்கொடுத்தாய்
கல் மனங்கள் கனியவில்லை, மதம் அபினியும்,
போதையுமாய் மாறிட்ட அவல நிலை? மாறவில்லை

யுத்தம், வறுமை, கொரோனா ஏழைகளை ஆட்டிப் படைக்க
செல்வர் விருந்துண்டு களிக்க, ஏழைகள் பசியால் துடிக்க
செல்வர் வாழ்வு வரமானது, ஏழைகள் வாழ்வு நரகானது
செத்தபின் மோட்சம் என்பது கேள்வியானது?

எல்லாப் புகழும் இறைவனுக்கே
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
Pax Ravichandra-26-08-2023

நத்தார்



“நான்” குன்றிக் குறுகி மடிந்திட-என்னில் இயேசு என்னும்
பேரொளி ஓங்கி ஒளிர்ந்திடும் நன்நாளே நத்தார்
நானும் இறை மகன் என்ற விழிப்புணர்வு
வாழ்வோ சத்திய யாத்திரையாகும் புது மலர்வு



உள்ளுணர்வில் இயேசுவாய் நாம் பிறக்கும் நாளே-
கிறிஸ்மஸ்-விழிப்புணர்வின் பெருவிழா
நானும் தந்தையும் ஒன்றென்ற திருவிழா

வாழ்வும், போதனையும் சத்தியத்திற்கு சாட்சியமாக
சடங்கு. ஆச்சாரமான மதவாததிற்கு எதிராக
இயேசுவின் தனி மனிதக் கிளர்ச்சி-திருச்சங்கம்
வழங்கிய தீர்ப்போ மதவாத சூழ்ச்சி



ஆணவமழிந்து உள்ளுணர்வில் உன்னதம் நிலைக்க
உன்னதங்களில் இறைவனுக்கு மகிமையும்,
பூவுலகில் நல்மனத்தவருக்கு அமைதியும் பொங்கிடும்
ஆனந்தப் பெருநிகழ்வு நத்தார்



சத்தியத்திற்கு சான்று பகிர, இயேசுவாய் பிறக்கும் நம்
இரண்டாம் பிறப்பு அன்பைப் பகிர்ந்து -உண்மையின்
பாதையில் வாழ்வை வழிபாடாக்கி-இறைவனை நம்முள்
அனுபூதியில் அறிந்திடும் அகக்கிளர்ச்சி



முடியிழந்து. குடையிழந்து, கோல் இழந்து, மனைவி
மகனை விற்று-வெட்டியனாய் சுடலையில்
நின்றபோதும்-சத்தியம் தவறாத மாபுருஷன்
அரிச்சந்திரன் இயேசுவின் சகோதரன்

விருந்துண்டு, புத்தாடை அணிந்து, பரிசு பரிமாறிட
வருடந்தோறும் வந்து போகும் வெற்றுக் கொண்டாட்டம்
அல்ல நத்தார்- அன்பு இறைவன் தம் மகனைப் பகிர்ந்ததுபோல்
நம்மை இறைவனுக்கு காணிக்கையாக்கும் பெருநாள் நத்தாா

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-26-8-2023

அகதிகளின் நத்தார் திருநாள்

நிலவும் முகம் வெளுத்தது, இரவில் நிகழும் கொடுமைகளால்
நிலமும் முகம் சிவந்தது-நித்தம் சிந்தும் குருதியினால்,
வானும் உடல் கருத்தது வந்து சேரும் உயிர்ப் புகையினால்,
வளியும் கருகி மணந்தது தகனப்பலியாகும் உறவுகளினால்

இருண்ட எங்கள் வானில்- எந்த நம்பிக்கை நட்சத்திரமுமில்லை,
அழுது வடியும் அகதிமுகாம்களில் இறைதூதர்களின் தேற்றரவுமில்லை,
பிரிவிலும், பசியிலும், நோயிலும் எழும் ஓலங்கள் பின்னனியாக-
காதலனைத் தேடி கண்ணீர் மாலை கோர்த்துக் காத்திருக்கும் கன்னியர்

விழிக்குளங்கள் வற்றி ஒளியிழக்க, உடற்கலங்கள் எரிந்து உயிரிழக்க
சுமைதாங்கி இல்லாத இதயத்தில் இமயசோகத்தை ஏற்றிவைத்து
சொர்க்கம் நாடி.-தமிழ் ஈழம் தேடி
எரியும் டயர்களில் பயணம் போன சொந்தங்கள்

மீட்பர் பிறக்காத நத்தாரை சமயம் கொண்டாடிட,
மீட்பு பிறக்குமென்று-காட்டிலும், கடலிலும் போராளிகள்
யுத்தம் புரிந்திட, புலம்பெயரும் அகதிகள்
அகதிமுகாம்களிலோ இராகேலின் ஓயாத ஒப்பாரிகள்

குண்டுகள் வெடித்து, கொலைகள் நிகழ்ந்திட
அன்னையர், தந்தையர் அழுகை வானை முட்டிட
ஏரோதும் மனம் குழம்பியிருக்கவேண்டும்
“இயேசு பிறந்திருக்கவேண்டும்”

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-15-07-2023

நீ வருவாய் என நான் இருந்தேன் ?

நீ வருவாய் என நான் காத்திருந்தேன், பல்லாண்டு
கடந்தும், பரம தந்தை உம்மை அனுப்பவில்லை
பவுலும், யோவானும் கூறியதெல்லாம் கேள்வியான நிலை?

மகா யுத்தங்கள் நடந்து முடிந்தும், சுனாமி
சூறாவளி, பூகம்பம், பஞ்சம், கொரோனா வருத்தியும்-
பயங்கரவாதம், இனவாதம் மலிந்த நிலையிலும்
மனுமகனே நீங்கள் வரவில்லை.

அன்பினால் இன்புற்று அனுப்பிய அருமை மகனை
அறைந்து கொன்றதால்-தந்தையும் அஞ்சுகின்றாரோ
உம்மை அனுப்பிட? உண்மை புரியவில்லை

மெல்லக் கொல்லும் கொரோனா உலகை அச்சுறுத்த-
உலகப் பொருளாதாரம் ஆதாரமின்றி ஆட்டம் காண
விஞ்ஞானமும், மருத்துவமும் நிலை தடுமாற- வந்தாலும்
மனுமகனைக் கண்டு கொள்ளத் தூய மனங்களில்லை?

திறந்த கோயில்களில் தெய்வமில்லை-
அச்சத்தால் மூடிய ஆலயங்களிலும்-வெற்று
ஆர்ப்பாட்டச் சடங்குகள் ஓய்ந்த நிலை
மதமோ சாரமற்ற உப்பான நிலை

வானமும், பூமியும் மடிந்தாலும் என் வார்த்தைகள் மடிவதில்லை-
வருந்திச் சுமை சுமப்போரே-வாருங்கள் என்னிடம் ஆறுதல் உண்டு
உயிர் தரும் உன் வார்த்தைகள் கேள்விக்குறியான நிலை?

அமைதியன்றி மனம் ஆழியலைபோல் அலைமோத
நீங்கள் வரவில்லை மடிந்து "நான்" வருகின்றேன்
உம்மைக் காண- எனக்கு வேறு வழி தெரியவில்லை

மண்ணவர் மடிந்து மண்ணுக்கே திரும்பிட,
கண்ணிலே நீர் மாலை கட்டி, கண்காணாத வைரஸீக்கஞ்சி
உயிர் மூச்சும் உனதென்று தெளிந்தே-தனிமைச்
சிறையிருந்து தவமாய் உன்னை நினைக்கின்றேன்

நீ ஈந்த உயிரும் உன்னிடம் திரும்பிட, உதிரும் புன்னகை
வேதாந்தியின் நிலை கூற, நான் என்று ஏதுமில்லை-
இருப்பே "நீ" என்றறிந்தே உன்னைச் சரணடைந்தேன்

மானுடத்திற்கு இது தவக் காலமோ? தம்மை அறிந்திட
வாட்டும் வைரஸ் புதிய கல்வாரிப்பாதையோ?
வாழ்வைத் தியானமாக்கினேன்

ஊர் அடங்க-உள்ளத்தில் அடங்காப் பீதி புயலாய்-
கடலாய் கொந்தளிக்க,இறைமகனே இன்னும் ஏனிந்த உறக்கம்?
எழுந்து கோவிட் புயலை அடக்க இன்னும் ஏனோ தயக்கம்?
சீடனாய் மனதில் மரண பயத்தின் ஆதங்கம்
என் சித்தமன்று, உம் சித்தம் நிறைவேறுக
சரணாகதியில் நிலைத்திட, மனதிலே
அமைதியின் பேரின்பம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-26-06-2023

நெஞ்சம் கோயிலாக

நெஞ்சம் கோயிலாக நீயே வாழும் தேவனாக
அஞ்சிடும் உணர்வுகள் என்னை அலைக்கழிக்க-அப்பா
தந்தாய் அபயம் என்றே உன்னைச் சரணடைந்தேன்

என் சித்தம், நினைப்பு, செய்கை எல்லாம்
தூப, தீப, மலர் அஞ்சலியாக-என் கண்ணீரும்
வற்றவில்லை, மனக்காயங்களும் ஆறவில்லை.

வெந்தணல் வீழ்ந்த புழுவாய் மனம் துடிக்க- கண்ணீர் சிந்தி
செந்தணலாய் விழிகள் சிவக்க, துயரங்கள் சுமந்து மனம் கசக்க
வாழ்வே கல்வாரிச் சிலுவையாய் கனக்க-என் தந்தையே
ஏன் என்னை கைநெகிழ்ந்தீர் என்றே கதறும் மனம்

ஆணவம் கரைந்து சரணாகதி பிறக்க
என்னை நான் அறிய, எல்லாம் சூனியமாக
வெறுமைக்குள் வந்து-வெறுமைக்குள் வாழ்ந்து
முழுமை தேடும் பயணமான வாழ்க்கை மன வறுமையைத் தர
வாழ்வு என்னைப் புத்தனாக்கியதா? சித்தனாக்கியதா?
பித்தனாக்கியதா? ஒன்றும் புரியவில்லை.

முள்ளும் மலருமாய் -இருளும் ஒளியுமாய், வாழ்வு
உறவு பூண்டு- உறவு களைந்து, வரவு செலவான வாழ்வு
தேடல்கள் ஓயவில்லை. தேடியதும் கைக்கூடவில்லை
எங்கோ தொலைத்ததை இங்கே தேடுகிறேன்

அறியாமை என்னை அலைக்கழிக்க, ஆசைப் புயலில்
மனம் சிக்கித் தவிக்க, அமைதி தேடும் உள்ளம்-மூப்பு,
பிணி, சாவு தொடர மெய்யின் பொய்யான யாத்திரை.

உதிர்ந்த இலை காற்றில் நடனமாடி, மெல்லக் கீழே விழுகின்றது
வீழ்ச்சியிலும் கொண்டாட்டமாய் அதன் மாட்சி.
வீழ்ந்தது சும்மா இருப்பதே சுகம் என்று ஓய்ந்திருக்கின்றது.

வந்து போகும் உலகிற்கு பிறப்பு, இறப்பு வாயில்கள்
மரணம் உடலிற்கே-ஆன்மாவிற்கல்ல
வாழ்வு, சாவு, இருமை கடந்திட, உண்மை புரிந்திட
மனம் கழித்திட நிலைத்த ஆனந்தம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-26-06-2023

நொருங்கிய மனம்

ஏழு முறை எழுபது மன்னியுங்கள் என்றவர் சீடர்
அச்சத்தை நிலை நாட்டி, வானுறையும்
வல்லவரின் சீடர் நாம் என்பதை எண்பிக்க,
அனனியா, சப்பிராவை கொன்ற மதவாதி பேதுரு

அன்பே கடவுள் என இயம்பும் மதங்கள்
விசுவாசிகளிடம் வேண்டுவதோ பணம்
இறைவன் விரும்புவதோ நொருங்கிய மனம்

நிறுவனங்களாய் மாறிட்ட மதங்கள்-மக்களைச்
சுரண்டிப்பிழைக்க- மதநிறுவனங்களின்
போதை வஸ்தாய் வல்ல இறைவன் நாறி மணக்க
சவாலே இல்லாத சகல கலா வல்லவனாய் மதம்.

மதப்போதை மானுடத்தைப் பிரிக்க
செல்வத்தை சுரண்டி மதவாதம் கொழுக்க
வருமான வரியில்லாத நிறுவனங்களில்
எளிமையோ தேடியும் கிடைக்காத செல்வம்.

உண்டியல்கள் இல்லாத ஆலயங்கள் உலகில் இல்லை
உழைப்பை உறிஞ்சும் பூர்ஷ்வாக்களாய்
மதங்களோ மாறிட்ட அவல நிலை

ஆன்மீகப் புரட்சியாளனுக்கு மதம் கொடுத்ததோ-சிலுவை
மரணம், மதவாதிகளின் கழுத்தில் சிலுவையோ ஆபரணம்
விழித்தவன் உண்மையைக் கண்டான், மதப்போதையில்
இன்புற்றவனோ தள்ளாடிக் குழியிலே வீழ்ந்தான்.

மதவாதிகளின் அரியணையில் இன்றும் அன்னாஸ், கைபாஸ்
தனி மனித அகக்கிளர்ச்சியானராய் இயேசு
இன்றும் பரபாஸை தேர்ந்து, இயேசுவை தீர்ப்பிடும் உலகு
உண்மை, நீதி. நேர்மை, கருணை செல்லாக்காசான நிகழ்வு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-15-07-2023

பாவி

அழுது சிவந்த விழிகளில் ஆனந்தம் பூத்திட
இழிந்த பாவி என்னையும்-இறைவன்
தம் திருச்சபை நடுவே என் மகன் என்றார்:

உலக இன்பமெல்லாம் மாயை என்று நானறிய
தோல்விகளால் என்னை ஆட்கொண்டார்
வெற்றி, தோல்வி கடந்து. விசுவாசத்தில்
என் வாழ்வு நிலைபெற அருள் புரிந்தார்

என்றும் நான் அவரோடு வாழ,
தனிமை எனக்கு ஆசிரானது-என் சிலுவையை
நான் சுமந்து அவரை பின்செல்ல
தந்தை அருள் வரமானது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-15-07-2023

படைத்தல்

மண்ணால் மனிதனை, தன்னுருவில் உருவாக்கி
மனிதரைப் படைத்தான் இறைவன்
ஆணும், பெண்ணுமாய் மனிதரைப் படைத்து
உலகை ஆள வரமளித்த அர்தநாரிஸ்வரன்

மதங்களைப் படைத்து , மானுடத்தைப் பிரித்து,
மண்ணால் தன் சாயலாய் இறைவனைப் படைத்து
கோயிலில் குடிவைத்த மனிதன்

உண்மை மறைந்துபோனது.
சித்தனுக்கு எல்லாம் சிவமானது.
பக்தனுக்கு கல்லும் தெய்வமானது.

மனிதனைப் படைத்த இறைவனோ-
மானுட இதயத்தில் குடியிருக்க இடம் தேடுகின்றான்
கோயிலில் இறைவனைக் குடிவைத்த மனிதனோ
மண், பெண், பொன்னைத் தேடுகின்றான்

அமைதியின் தேவனைக் கொல்லத் தேடும் உலகில்
அரியணையில் இன்றும் கொடிய ஏரோது,
ஊரெங்கும் ஓயாத இராககேலின் ஒப்பாரி
உலகெங்கும் தாய்களின் விழிகளிலோ ஒழியாத மாரி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-15-07-2023

பக்தன்

பக்தியால் பித்தனாகி-நித்தம்
உன் நினைவால் தவிக்கின்றேன்
உத்தமனே, இரட்சகனே-
என்னையும் ஆட்கொள்ளாயோ?

மண், பொன், மாதரசித் துணை வேண்டாம்,
ஞானப் பெருநிலை வேண்டாம், இறைவா
எனை ஆளும் தலைவனாய் நீ வேண்டும்
எல்லாம் நீயாக வேண்டும் எனக்கு,

என் ஐம்புலனும், ஆறறிவும் நீயாக வேண்டும்
உயிர், மெய்யும், சித்தம், நினைப்புச், செய்கையும்
உனக்கு வழிபாடாக வேண்டும், நான் அழிந்து, நீ பிறக்க
வழியும், உண்மையும் , வாழ்வுமாய் நீ வேண்டும்

எல்லாம் நீயானபின் நானில்லை
எங்கும் சச்சித் ஆனந்தமே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-15-07-2023

பழைய ஏற்பாடு

அன்று பத்து வல்ல செயல்களால் பாரோவை
அச்சுறுத்தி, இஸ்ராயேலரரை மீட்டவர்:
" அடோல்ப் ஹிட்லர்" அறுபது இலட்சம் யூதர்களை
அழித்தபோது வாழாவிருந்தது ஏனோ?

"அல்லா- யெகோவா, பரம தந்தை வேறாகிட
குண்டுச் சத்தமும்- வற்றாத குருதிப் புனலுமாய்
வாக்களிக்கப்பட்ட பூமி-மதப்போர்களால் நாறும் சாமி

நிலைமாறும் உலகில் பாரோக்களாய் யூதர்களும்
பரிதவிக்கும் அடிமைகளாய் பலஸ்தீனரும் மாறிட
பத்து பெரும் துன்பங்களும் பயங்கரவாதமாய்
உலகை அச்சுறுத்த,ஓயாத யுத்தங்கள் இங்கு

அன்று எகிப்திற்கு இறைவன் இட்ட சாபம்
இஸ்ராயேலருக்கு வரமானது-இன்றோ. ஜிகாத்தாய்
மதப் பயங்கரவாதமாய் உலகை அச்சுறுத்துது.
"அல்லாஹு அக்பர்" பூமியை அதிரவைக்குது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-15-07-2023

பாலியலும் பரிசுத்த வேதாகமமும்

மானுடம் பெருகிட ஆண்டவன் வகுத்த நியதி பாலியல் உறவு
காயின், ஆபேல், சேத் ஆதிப் பொற்றோரின் வாரிசு
சந்ததி தொடர்ந்து பெருகிட, பெற்றோர், பிள்ளைகள்
பாலியல் உறவு மறுக்க முடியாத யாப்புறவு?





பெண்களுக்கு அழகோ பெருநிதி,
அழகியரைத் தம் மனைவிகளாக்கிய
வானவர்க்கு அழகோ சங்கநிதி -Gen. 6-2

லோத்திடம் தஞ்சமடைந்த வானவரை
வல்லுறவு செய்ய வந்த சோதோம், கொமோரா ஆடவர்
தன் இரு மகள்களையும் தாரை வார்த்து-வானவரைக்
காக்க முயன்ற தந்தையின் நீதி? அநீதி -Gen19-8

தந்தைக்குப் போதையேற்றி-இரு மகள்களும்
தந்தை லோத்தோடு கொண்ட உறவு, மோவாபு,
பென்அம்பி பிள்ளைகளாய் வழி மரபு-Gen 19-32

குடிபோதையிலிருந்த தந்தை நோவாவுடன் -தகாத
உறவு கொண்ட மகன் கானான், தந்தையின் மனைவியையும்
புணர்ந்தே மானத்தை அழித்தான்-Gen 9-22, Levi 20:11
தந்தையின் மனைவி பிலகாவுடன் யாக்கோபின் மகன் ரூபன
மஞ்சத்தை பாழாக்கி இன்பம் கண்டான்-Gen,35-22



தந்தையின் சகோதரியை மணந்த அம்ராம்
ஆரோன், மோசேயின் தந்தை-Exodus-6:20

லேயா, ராகேல், அக்கா தங்கையை மணந்து
இரு தாரம் கொண்ட யாக்கோபு-Gen 29-15
யாக்கோபின் மகள் தீனாவை வல்லுறவு செய்த செக்கேம்
ஊராரைப் பழிவாங்கிச் சினம் தணித்த சகோதரர்-Gen.34

யூதாவிற்கு தாமாரோ மருமகள்
தீய கணவன் ஏர் மரித்திட, சகோதரன் ஓனானுடன்
கூடிச் சந்ததி பெருக்கிடக் கொண்ட உறவு
விந்தை தரையில் சிந்திய விபரீதச் செயலோ ஓனாயிசம்

தன் உரிமையை நிலை நாட்ட விலைமாதாய்க் கோலம் பூண்டு
மாமனார் யூதாவுடன் உடலுறவு கொண்ட தாமார்
இரட்டைப் பிள்ளைகளுக்குத் தாயான நிகழ்வு-(Gen-38:1-26)

லேவியாரின் மறு மனைவியை, இரவும் முழுவதும் கூட்டாக
வல்லுறவு செய்த கொடியவர் Judges-19-25
மிதியானியரை அழித்து, ஆண் குழ்ந்தைகளைக் கொன்று
ஆணுறவு கொள்ளாத பெண்களை, உங்களுக்காக
உயிருடன் வைத்துக் கொள்ளுங்கள்-சரணடையாத ஊரிலுள்ள
ஆண்களையும் வாளால் கொன்று விடுங்கள்-Deutronemy-20-13
மோஸேயின் கட்டளை -Numbers 31-17-18



Midianite women, children and livestock taken captive by Israelite soldiers after all Midianite men had been killed and their towns burnt. *The Bible and its story* (1908).

விலைமாதோடு உறவு கொண்ட சாம்சன்-Judges 16
உரியாவின் மனைவி பத்சேபாளோடு உறவு கொண்டு -
உரியாவைக் கொன்று, தாவீது புரிந்ததோ விபச்சாரம்- 2 Sam 11
தாவீதின் மகன் இயேசு எனப் போற்றுவதோ அபச்சாரம்

தாவீதின் மகன் அம்னோன், தங்கை தாமரைக்
கற்பழித்து காமம் தீர்த்த கொடுமை -2 Sam.13-14
தாவீதின் வைப்பாட்டிகளுடன் ஊரறிய உறவு
கொண்ட மகன் அப்சலோமின் சிறுமை- 2 Sam 22



The Levite finds his gang-raped concubine dead on his doorstep. Art by Gustave Doré (1880).

பலதாரம் கொண்ட ஆபிரகாம், தாவீது,
ஞானி சாலமோனுக்கோ-எழு நூறு
மனைவியர், முந்நூறு வைப்பாட்டிகள்

பாலியற் குற்றங்கள் மலிந்த சமூகம் திருந்தி வாழ்ந்திட
வழங்கிய சட்டங்கள் லேவியராகம் 18 அதிகாரம்
காமத் தீயில் உருகுவதை விட திருமணம் நல்லது-
பவுலின் அறிவுரை (1 கொரிந்தியர் 6-15-20, 7: 9)

மணமாகாத கன்னிப் பெண்ணை ஒருவன் வல்லுறவு செய்தால்
அவன் அவளை மனைவியாக்கிக் கொள்ளல் வேண்டும்-Deut.22-28-29
வல்லுறவுக்கு வழங்கிய உரிமமாய் நீதி- பெண்மைக்கே அநீதி



Amnon and Tamar. Anonymous late 17th-century painting.

உன் குழந்தைகளைப் பிடித்து-பாறையின்மேல் மோதி
அடிப்போர் பேறு பெற்றோர்-பபிலோனியருக்கு இட்ட சாபமும்
செபமும், சங்கீதமுமான அவலம்- Psalms- 137-9

ஏரோதின் மனைவி ஏரோதியாளோ, சகோதரன் பிலிப்பின் மனைவி,
சகோதரன் சந்ததி நிலைக்க, வாரிசின்றி இறந்த சகோதரன்
மனைவியை மணத்தல் சட்டமான நியதி ?
எகிப்தியரை வதைத்துச் செங்கடல் கடந்து வாக்களிக்கப்பட்ட நாடு
நோக்கிய பயணத்திலே வன்முறை சிந்திய இரத்தம்-நெறி கெட்ட
பாலியல் உறவுகளோ பலரகம், இதில் எங்கே பரிசுத்தம்?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-02-07-2023

பசி

மாரி மழை கழனிகளை வெள்ளத்தில் மூழ்கடிக்க
பொத்தல் கூரையும், களிமண் குடியிருப்பும் கவலையால் வாடக்
காற்றும், மழையும் வருத்தும், கஞ்சுக்கும், கூழிற்கும்
தவமிருந்து கண்ணீர் வெள்ளத்தில் ஏழை மனம் மூழ்கும்

கூலியின் கூன் முதுகில் குதிரைச் சவாரி செய்தே விலைவாசி
வான் ஏறும், பாண் விலையால்-வயிறோ வற்றிய குளம்போல்
ஒட்டிக்கிடக்க பழங்கஞ்சும் பஞ்சாமிர்தமாகும்.

போஷாக்கின்மையால், தாயும், சேயும் நோய்க்கிரையாகிட
கள்ளும்,-வடிசாரயமும் கவலை தீர்க்கும் கொடுமருந்தாகிடும்.
வறுமைக்கு விடைதேடும் ஏழைகளுக்கு, சமத்துவம்
பேசிடும் சிவப்புச் சடடைகளும் துன்பக் குளிர் போக்குமோ?

நீர்தேடி இங்கே நாளும் தீர்த்த யாத்திரைகள்
பயிர் முளைக்க, மழைக்காய் தினமும் பிராத்தனைகள்
தறி ஓடி உயிர் பிழைக்க தவமிருக்கும் பட்டினிப் பாத்திரங்கள்.

பட்டினி வாட்டிடும் பஞ்சப் பிறவிகளுக்கு
கூழும், கஞ்சும் தேவாமிர்தங்கள், கவலையும், கண்ணீரும்
நோயோடு வரும் வேண்டாத விருந்தாளிகள்.

அடுப்பங்கரையில் எரியாத நெருப்பு அடிவயிற்றில் தினம் எரியும்.
இரவிலும் உறங்காத கவலை-பகற்கனவிலும்
அச்சுறுத்தி கறையான்போல் மனதை தினம் அரிக்கும்.

வண்ணமிழந்த மானுடங்கள் வறுமைக் காரிருளுக்குள்
விடியலின்றி வாழ்நாளெல்லாம் வாடும். சேவல் கூவாமல்
விடியும் பொழுதும், காகம் கரையாமல் வரும் விருந்தும்
புதிய சோகம் சொல்லும், வாழ்வு சிலுவையாகும்

கல்வாரிப் பலியான வாழ்வில் கழுத்தில் தொங்கும் சிலுவையும்
கவலை தீர்க்குமோ? பசிப்பிணிதான் போக்குமோ?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-15-07-2023

பசியும் பாவமும்

பசியோ வயிற்றைக் கிள்ள-பால்குடிப் பிள்ளையோ மார்பை உறிஞ்சி
பசியைச் சொல்லி அழ- மானத்தை காப்பதா, பழிப்பதா எனக்
கந்தை கவலை கொள்ள, விதியை நொந்து வடியும் கண்ணீர்
இதயம் நொந்து இறைவனை அழைக்க நெஞ்சிலே வடியம் செந்நீர்

துள்ளிசை ஒலிக்க, மெல்லிடையாள் ஆட, ஆடம்பர விடுதிகளில்
அறுசுவை உண்டிகளோடு வறுமை ஒழிப்பு மாநாடு ,
பார்வை மறைத்த ஈர விழிகளோடு, வறுமை ஒழியும்
நம்பிக்கையோடு, ஒட்டிக்காய்ந்த வயிற்றில் பசியின் கூப்பாடு

பசிவர வில்லைகளும், பாதிமுழுத்துணி-நாகரீகமும்
உண்டு, குடித்து கொழுத்த தொந்திகள் கூடிக் கொண்டாடிட
நாளும் காமன் பண்டிகை , பசியும் பஞ்சமும் சொந்தமென
தஞ்சமடைந்த ஏழையிடத்து எந்நாளம் நோன்புப் பண்டிகை

வாடிடும் ஏழைகளோ வறுமைத்தீயில் வேகி நின்றார்
கந்தை உடுத்தி, கிடைத்ததை உண்டு மந்தையாய்
கூடிவாழும் நடைபாதை வாழ்க்கையில்- விருந்துகளில்
எஞ்சியதும் கிடைக்காதோ இறைவா என ஏங்கி நின்றார்

அரைமுழத் துணியில் ஆடை கட்டி, மதுக்கடலில் நீந்திக்குளித்து,
காமன் விழாவாய் உங்கள் “வறுமை ஒழிப்பு மாநாடுகள்”
அழுவதா? சிரிப்பதா எனப் புரியாத ஏழையர்
எம் வாழ்வோ கல்வாரி, வறுமையோ இரும்புச் சிலுவை

கண் கலங்கி மனம் வருந்தி வந்த வழியே செல்கின்றோம்
வான் பறவைகளுக்கு உணவும், காட்டுப் புஷ்பங்களக்கு
நாளும் உடையும் தரும் இறைவன் எம் தந்தை,
எம்மைக் காப்பார், ஏனெனில் நாம் அவரின் பிள்ளைகள்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra16-07-2023

பாட்டும் நானே பாவமும் நானே

பரமனோ தன்னைப் பல்வகையாய் படைத்து
படைப்பில் தன்னை மறைத்துக் களிப்புற்றான்
"இருப்பவர் நாமே" நாமம் என தம்மைக் குறிப்பிட்டார்

புல்லாகிப், புழுவாகி, பூண்டாகி மரமாகி,
மனிதனாய் படைத்தவன் மா கலைஞனே-
சிற்பமும், ஓவியமும், பாட்டும், பரதமும் எல்லாம் அவனாக
நடராஜனாய் அவன் ஆனந்தத் தாண்டவம்

சக்தியும், சடமுமாகிச் சர்வேஸ்வரனாய் அவன் கூத்து
மனிதனே இறைவனாக , மனம் அழித்து தன்னை அறிய
அவன் திருவிளையாடல்கள்.

மனிதன் இறைவனாகாவிடில், அவன் வாழ்வு வெறுமையே
மீண்டும். மீண்டும் அவல நிலையே
தன்னை அறிவதே இறைவனாய் மாறும் வழி
அதுவே பரிணாமம்.

சூனியமாய் -சூனியத்துள் நிறைந்த சுந்தரமாய் அவன்
இருப்பாய் அவன் இல்லாமையாய் அவன்
நிர்க்குண -சகுண பிரம்மங்களாய் அவன்
காலமும்- அவன், காலமளித்த-காலியாய் அவன்
கடவுளாய் அவன்-கட உள்ளாய் அவன்

நானும் அவன் நீயும் அவன், நாத பிரம்மம் அவன்
ஜோதி அவன்-ஆதி அவன், ஆதி அந்தமில்லாதான் அவன்
ஒருமைக்குள் இருமையாய், இருமைக்குள் ஒருமையாய் அவன்

வாழ்வின் சப்த சுரங்கள், அவன் நாமோ செவிடர்
ஆனந்த நடராஜன் அவன்-நாமோ குருடர்
சச்சித்தானந்தம் அவன் -ஆணவமழிந்திட
பூரண சரணாகதியில் சத்திய தரிசனமாய் அவன்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-06-2023

பயணம்

ஒரு வீடு இரு வாசலாய் உலகு- வந்து,
போகும் வாழ்வில் , பிறப்பு, இறப்போ வாயில்,
நம்மை நாம் அறியும் பயணமோ தீர்த்த யாத்திரை
நம்முள் செல்வதே மெய்யான யாத்திரை

ஞானப்பழத்தை வென்றிட அண்ணன் தம்பிகளின் யாத்திரை,
வெளியே தேடி ஏமாந்த ஆறுமுகன்-உள்ளே தேடி
அம்மையப்பனாய் உலகைக் கண்ட விநாயகன்
நம்முள் இருவர், உள்ளே -வெளியே நம் தேடல்கள்

ஆறு முகம் இருந்தும்-உள் நோக்க
ஞான முகம் இல்லை- யானை முகத்தான்
உள்ளே புத்த ஞானியின் தேடல்

அறிவுக் கனியை ஆண்டவன் விலக்கிட
அறிவை தேடி அழைப்பை விடுத்த அலகை
திருடிப் புசித்தவன் இருமைக்குள் விழுந்தான்-ஆணவத்தால்
செய் பிழை ஏற்க மறுத்தே தன்னை இழந்தான்

எல்லாம் நின் செயல் என்று ஆணவம் துறந்து
சிலுவைச் சாவை ஏற்றவர் நிலை வாழ்வை தம்முள் அடைந்தார்
வாழ்வுக்கனியாய் மாறி மீட்பராய் மலர்ந்தார்

ஊதாரி தன் பயணத்தில் உண்மையை உணர்ந்தான்-
வேடதாரி அண்ணனோ வரட்டு நியாயம் பேசி
தர்மத்தை மறந்தான்

வெளிமுகப் பயணி ஆதாம் ஏதேனை இழந்தான்
உள்முகப் பயணி இயேசு ஏதேனை அடைந்தார்
ஆதாம், இயேசு வாழ்க்கை வட்டத்தின் இரு பாதிகள்
ஆதாமாய்த் தொடங்கி அறிவை நாடி-
ஆணவம் வளர்த்து ஏதேனை இழத்தல் ஒரு பாதி

ஆணவம் கழித்து இயேசுவாய் வாழ்ந்து ஏதேனை அடைதல்
மறுபாதி-வாழ்கை வட்டம் பூர்த்தியாவதே நிலை வாழ்வு
பூரணமே வாழ்வு, ஆதாமும் நாமே-இயேசுவும் நாமே
தம்மை அறிந்தவர் வாழ்ந்தார், அறிஞரோ வேதங்கள் ஓதி
வீணாய்க் காலங்கள் கழித்தார்

சொல்லுக்கும், உணர்வுக்கும் பொருள் அறிந்தவரோ ஞானி
சொற்சிலம்பாடும் அறிஞனோ வரட்டுத் தத்துவவாதி

ஆணவமழித்தலே வாழ்வு
தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-06-2023

பெண்மை

மலர் கொடுத்தேன், மயங்கி நின்றாள்
இதயம் கொடுத்தேன்-உயிர் கொடுத்தாள்
காதலித்தேன்-என்னைக் கவிஞனாக்கினாள்
தாலி கொடுத்தேன்--தெய்வமாக்கினாள்
வீட்டை கொடுத்தேன்-கோயிலாக்கினாள்

காய் கறி கொடுத்தேன்அமுது படைத்தாள்
என்னை கொடுத்தேன் -தன்னை இழந்தே
என்னைத் தந்தை ஆக்கினாள்.

தெய்வம் இவள் வீடே இவள் கோயில்
கணவனே இவள் காணும் தெய்வம்
கலைமகளும், திருமகளும், மலைமகளும்
ஒன்றாய் இணைந்த அன்னையுமிவள்

துன்பம் தாங்கும் பூமாதேவியுமிவள்-கலங்கிடும்போது
மார்போடணைத்து கண்ணீர் துடைத்துத்
தாய்மடி தரும் தாரம் இவள்
வேராய், விழுதாய் என்னைத் தாங்கும் தாயுமிவள்
தெய்வபிறவியன்றோ!

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-24-04-2023

பேதங்கள்

புண் மொய்க்கும் ஈக்களுக்கு பூக்களின் பெருமை தெரியாது
பூ மொய்க்கும் தேனீக்கள் புண்களை ஒருபோதும் மொய்க்காது
போதையில் இருக்கும் வெறியர் அமுதின் சுவை அறியார்
சாக்கடைப் பன்றிகளுக்கு முத்துக்களின் அருமை புரியாது

குயில்களின் கானத்தை காக்கைகள் இரசிப்பதில்லை
காக்கைகள் கரைந்தாலும், குயில்கள்
காக்கைகளோடு சேர்ந்து கரைவதில்லை

தன்னை அறிந்தவர், புலனின்பம் தேடுவதில்லை
இருமையின் பேதம் கடந்தவருக்கு
விருப்பு, வெறுப்பு கிடையாது.

அறிவுக் கனியைச் சுவைத்தவர்ஆணவத்தின் கசப்பை அறிந்தார்,
ஆணவத்தை கழித்து தன்னை அழித்து-பரிபூரண
சரணாகதியல் , நிலை வாழ்வை இயேசு தம்முள் கண்டார்
உன்னதமே தூய மனம்-இறப்பைக் கடந்த உயிர்ப்பாய் அக்கணம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-06-2023

பிழை பொறுப்பாய்

எல்லாப் பிழையும் இழைத்துக்களைத்தேன்
நின்னை நினையாப் பிழையும்-நெஞ்சில்
நிறுத்தாப் பிழையும், நின் மொழி கேளாப் பிழையும்
நின் வழி நடவாப் பிழையும், நின் நாமம் சொல்லாப் பிழையும்
நெஞ்சுருகி நின்னை துதிக்காப் பிழையும் என் பிழையாக
உன்னைச் சரணடைந்தேன் இறைவா
என்னை ஆட்கொண்டு அருள் புரிவாய்-அப்பா

சொல், செயல், சிந்தனையால்
செய்த பிழை எல்லாம் மனதை வருத்த
மன்னிப்பை இரஞ்சுகிறேன்-மாதவனே
என்னையும் ஒரு முறை நினைந்தருளி
நிம்மதி அருள்வாய்- என் தகப்பனே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-08-06.2023

பிரபஞ்சக் கோலங்கள்

நாளும் பொழுதும் -புள்ளி வைத்துப் புழுதியால்
புழுதியில்-பிரபஞ்சம் போடும் அழகுக்கோலங்களில்
கண்ணக்குத் தெரியாத கலை வடிவாய் பிரம்மம்

அன்னை தந்தை-கணவன் மனைவி
பிள்ளை குட்டி-சொந்த பந்தம்-
உறவாய் பகையாய் தொடரும் கோலங்கள்
அழகாவதுமுண்டு-அலங்கோலமாவதுமுண்டு

காலம் ஒரு பொருட்டல்ல, காத்திருப்பும் பொருட்டல்ல
ஆணவம் கழித்தலே நிலை வாழ்வு- நாளும்
வடிவங்கள் மாறிட, ஜனனம்-மரணம் வரவு செலவாகிட
புதிய பரிமானங்கள்-பரிணாமங்கள்

கலைந்த புள்ளிகள், கலையாத காரிருள் வானில்
நட்சத்திரங்களாய் ஒளிர வியந்து பார்கின்றேன்
மலைத்துப்போகின்றேன்.

காலம் தோன்றாக் காலம் முதல், பிரபஞ்சம் போடும் கோலங்கள்
உறவாய்- பிரிவாய்-வரவாய், செலவாய், இணைப்பாய்- பிரிப்பாய்,
எத்தனை கோலவடிவங்கள், வாழ்ந்து காலம் பல கழிந்திட-
வாழ்வு கோலமானதா? அலங்கோலமானதா? தியானிக்கிறேன்

தோல்விகளும்-பிரிவுகளும் சோகச் சுனாமியாய்
அழித்த நிகழ்வுகளும் வாழ்வின் திசையை மாற்ற
அமைதி தேடி அறிவைக் கழித்து உள்நோக்கி
திசைமாறிய உன்னதப் பயணமாய் வாழ்வு

நரை பூத்து, நகரும் காலம் சொல்ல, முதுமை பூசி
இள மெய்யும் தடுமாற- விழி மங்கி வில்லைகள் அணிந்து
மருந்துண்டு பத்தியம் காத்து பொன்மானை தேடிய-ராமனாய்
உலகில் அலைந்து, ஊதாரி மகனாய் ஞானம் பெற்று
வீடு திரும்பும் பயணம் எல்லாம் ஞானப் பயணமோ?

வார்த்தை கடந்து, வாழ்ந்து அறியப்பட வேண்டிய அனுபவம் உண்மை
வார்த்தைகளால் உண்மையை எச்சில் படுத்தும் உலகில்
உண்மையைத் தேடலாக்கி, விழிப்புணர்வோடு வாழ, வாட்டும்
தோல்விகள்-வரங்களே, தொடரும் வாழ்வு தவமே
பிரபஞ்சத்தின் கூறாய் நாம்,
பிரபஞ்சமாய் நாம், அறிந்தால் ஆனந்தமே

சடமும்- சக்தியும், இயக்க, நிலைச்சக்தியாய்
ஆடிடும் சிவசக்தி நடனம்-பிரபஞ்சம்,
எரியும் முட்செடி சொல்லும் அரிய தத்துவம்

சுற்றும் கோளங்கள், நீள் வட்டப் பாதையில் சுழன்றாட
சச்சித்தானந்தமாய் சிவசக்தி ஆனந்தத் தாண்டவமாட
வாழ்வு-பிரபஞ்சத்தின் ஆனந்த கூத்தே
ஆடுபவர் நடராஜனே, தில்லைக் கூத்தனே

கனவு வளர்த்து-ஆசைச் சங்கிலியில் கட்டுண்டு
ஆடிக் களைத்தவர், பாதியில் ஆட்டத்தை நிறுத்தியவர்
மீண்டும் ஆடி ஆட்டத்தை முடித்திட ஏழ் பிறப்பெடுத்தார்.

பெண் இன்பம் தேடிய மன்னன் யயாதி-பயணத்தில்
பாதை மாற்றிக் கொண்டான்-மண் இன்பம்
தேடிய மகா அலெக்ஸாண்டர்
பாதி வழியில் பரிதாபமாய் உயிரிழந்தான்

பொன், மண், பெண் இன்பம் துறந்த-சித்தார்த்
ஞானம் பெற்று கௌதம புத்தரானார்
முள்முடி சூடி, மன்னன் எனக் கேலி செய்தவரோ
சிலுவையில் இறை மகனாய் உருமாறினார்

இறப்பூ ஒரு தூக்கம்-பிறப்பூ- ஒரு விழிப்பு
இறப்பூ- பிறப்பூ இணைந்த மலர்தலே வாழ்வு
பிறப்பறுக்கும் வாழ்வுக் கலையை
வாழ்ந்து காட்டியவர் மாபுருஷர்களே

எல்லையில்லாத அண்டவெளியில் எத்தனை நட்சத்திரங்கள்
பார்த்து, இரசிக்க, பேரழகைக் காணக் காரிருள் வேண்டும்-நம்முள்
விழிப்புணர்வு வேண்டும், வாழ்வு முரண்பாடுகளின் இணைப்பாக
இருமையின் உறவாக வியப்பூட்டுகின்றது-

பிரபஞ்சத்தில் ஒன்றாய் நாம் எண்ணி வியந்து போகின்றேன்
பிரபஞ்சமாய் விரிந்து உருவழிந்து-உருக்கொண்டு
ஓர் விளையாட்டாய் வாழ்ந்து போகின்றேன்
வாழ்வு இறை லீலை விழிப்புணர்வில் புரிகின்றது.
பிரபஞ்சம் தன் இரகசியங்களை மறைப்பதில்லை-சீடனுக்கு,
சத்தாய் , வேதமாய் சித்தின் உபதேசம் ஓய்வதில்லை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-28-06-2023

“பொன் கன்று ”

“மதச்சந்தையில்” “கிறிஸ்தவத்தின் உரிமத்தை வத்திக்கான்”
தன் ஏகபோக சொத்தாய் ஆக்கிரமித்த இருண்டகாலம்
நாடோடிப் போதகரின் வாரிசுகளுக்கு, மணிமுடியும், அரியனையும்
சொந்தமானபோது பொற்கோல் தாங்கிய மன்னராய்
பொன்னாடையில் ஊரோமை ஆயர்

தலைமை ஆயனின் பொற்கோலுக்கும், தலைவணங்க
மறுத்த செங்கோல்களுக்கும், தொடர்ந்த யுத்தங்களால்
செபமே ஜெயம் வெற்று கோஷமானது
யுத்தமே ஜெயம் நிதரிசனமானது

அதிகாரப் போட்டியின் உச்சத்தில் பிளவுண்ட கிறிஸ்தவம்
காட்டிக் கொடுப்பு, மறுதலிப்பு கை வந்த கலையாக
இயேசுவை மீண்டும் சிலுவையிலறைந்த திருச்சங்கமாய்
அண்ணகத் திருச்சபை, அதிகாரப் பேரவை

இறைமகன் இரண்டாம் வருகை தாமதிக்க
குரு-தத்துவம் இழந்து அரவாணியான குருத்துவம்
“பொன் கன்றுகுட்டிகளாய்” சிலை வணக்கத்தை
அரங்கேற்ற ஆரோனாய் வத்திக்கான்

சிலைகள் தெய்வங்களாகிட-சடங்குகளும்-
மந்திரங்களும், திருவருட்சாதனங்களும்
குருக்களின் மந்திரக்கோலாயின.

எழுத்துரு இல்லாக் காலத்ததே -இறைவன் எழுதித்
தந்த, பத்துகட்டளைகளும் கற்பனையோ?
எறிந்திட உடைந்திடும் வெறும் கற்பலகைகளோ?
மோயீசனே சொல்லுங்கள்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra- 16-07-2023

பூஜை

சிலைகளுக்குப் பூஜைகள் எதற்கு? ஆணவம் கழித்து
தூய மனமானல் இறை இல்லம் நீ
கோயில்களுக்கு விளக்குகள் எதற்கு? உண்மையின்
விளக்கை உன்னில் ஏற்று, அக இருள் அழிய,
உண்மை விடுதலை அளிக்க, நீயே உனக்கு ஒளி

மண்டியிட்டு இரஞ்சாதே, பாவியும், ஏழையும் அல்ல நீ,
கருணையால் நிறைந்து, மன்னிப்பால் -எதிரியையும் நண்பனாக்கு
செய் பிழை அறிந்து, திருந்து, சகோதர் நாம் இறை மக்களே,
நம் தந்தை இறைவனே

குனிந்து வணங்குவதை விட, வீழ்ந்த ஏழையை தூக்கிவிட
பணிவோடு பணி செய், இருப்பதை பெருக்குவதைவிட
இல்லாதவனோடு பகிர்ந்து இதயத்தை விசாலமாக்கு
இறையரசைத் தேடு, எல்லாம் உனதாகும்.

நினைவிலும் இனியது நினை, எப்போதும் நல்லது செய்
செயல்கள் கர்மயோகமாக, அன்பு பக்தியோகமாக
அறிவு ஞானயோகமாக, வாழும் தேவனாய் நீ

மதங்களைப் பற்றாதே-மானுடம் பிரிந்துவிடும்
நிறங்களை பற்றாதே, நிறவெறி வீழ்த்திவிடும்
இன, மொழிகளைப் பற்றாதே இன்பத்தை பறித்துவிடும்
பற்றற்று வாழ் பறவையைப்போல் உயரப் பறப்பாய்
சூனியத்தில் நிலைத்து இருப்பு சச்சித்தானந்தம் என அறிவாய்

கொண்டு வந்தது ஏதுமில்லை, கொண்டுபோவதும் ஏதுமில்லை
முடி துறந்த சித்தார்தன் ஞான புத்தரானார்-நாடோடி
இயேசுவும் அன்பின் வடிவானவார் வழிபடும் இறைவனானார்

கட உள்ளே-கடவுள் நீ எல்லாம் உன்னுள்ளே
பிரபஞ்சம் நீ, அன்பினால் இன்புற்று வாழ், அறம், பொருள்,
இன்பம் யோகமாக வாழ்வைத் தவமாக்கு, வீடு உன்னுள்ளே.
பூக்களைப் பறிக்காதீர் -வாடிவிடும்
படைக்காத வாழ்வை அழிக்காதே, வாழ்வு தெய்வீகமே
நீயே ஒளியானால்-விளக்கெதற்கு? கரைசேர்ந்தபின் படகெதற்கு?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra- 16-07-2023

போரும் அமைதியும்

யுத்தத்தில் கொலைகள் நீதியானது
சிந்திடும் இரத்தமோ என்றும் மாறாத சிவப்பானது
ஆயகலைகளில் ஓர் கலை யுத்தக்கலை
அமைதியோ உலகம் அறியாத அருங்கலை



தர்ம யுத்தம் என்று ஏதுமில்லை
குருஷேத்திர, சிலுவை யுத்தங்களிலும்
பொய்யும், படுகொலையும் நீதியான நிலை

கண்ணிற்கு கண், பல்லிற்கு பல் நீதியானால்
உலகில் குருடரும், பல் இல்லா வாய்களும்தான் மிஞ்சும்
வர்த்தமானரும், புத்தர் பெருமானும் போதித்த
அகிம்சையை மனிதம் மறந்திட அமைதிக்கோ பஞ்சம்

எதிரியையும் அன்பு செய்யுங்கள்-மனுமகனின் போதனை
வேதனையின் உச்சத்திலும், தம்மை வதைப்போரையும் மன்னிக்க
தந்தையை வேண்டிய மாமனிதனின் கருணையோ சாதனை

மதவாதப் பாதையில் மன்னிப்பும், கருணையும் வற்றிட
மதவாதப் போர்களால் மானுடம் பிரிந்திட
மத யுத்தங்கள்-கங்கையாய் ஓடும் இரத்தங்கள்

ஷலோம், அமைதி உங்களோடு இருப்பதாக
சலாம் அலேக்கும்-சம்பிரதாய வாழ்த்தாய்
வெற்று வார்த்தைகளாய் வெம்பிட
வெதும்பிடும் நல்மனங்கள்

உலகாளும் ஏரோதுக்கள்-அமைதியை தேடிக் களைத்து
ஆறுதலின்றிப் புலம்பும் இராக்கேல்கள்

மதப் பயங்கரவாதம் ஆதி வேதமாகிட
அழுகைச் சுவரும், அல் அக்ஸா பள்ளியும்
இராமர் கோயிலும், பாபர் மசூதியும்
மதவாதத்தின் இழி நிலைகள்

நாமமும், நீறும், குல்லாயும், சிலுவையும்,
சீவர ஆடையும், ருத்திராட்ச மாலைகளும்
வெற்று வேடங்கள்

வாட்களின் உரசல்களில் தீப்பொறிகள்
குண்டுகளின் முழக்கங்களில் கண்ணீர் மழைகள்
குருதிச் சகதியில்-சிக்கதித் தவிக்கும் தர்மச் சக்கரம்-
சீவர ஆடையை சிப்பாக்கிடும் அப்பாவிகளின் இரத்தம்

அன்பே சிவம்
ஏகம் சத், விப்ரா பகுதா வதந்தே-
வெற்று வசனங்கள்
உண்மைக்குச் சான்று பகிராத மதங்கள்
சாத்தானின் வேதங்கள்

இறைவனுக்கு-ஈசாக்கின் கதறல் புரியவில்லை
பெத்லேகம் குழந்தைகளின் அழுகை எட்டவில்லை
கல்வாரியில் கேட்கும் கதறலோ ஏலி எலி லமா சபக்தானி
இறை விரும்பும் பலியோ குர்பானி

எட்டாத வானத்தில் வாழ்பவரை நோக்கி கதறுவது வீணே
இறைவன் நம்மோடு -“இம்மானுவேல்” நம்முள்ளே
கட உள்ளே மானுடா-கடவுள் நீ

உண்மையின் தரிசனம் உன்னுள்ளே
ஆணவம் கழித்த சூனியமே ஆனந்தம்
சித் ஆகாசம் நம்முள்ளே

அன்பு மனங்களை அச்சுறுத்திட’
ஆலயங்களில் “வெருளியாய்” சிலுவைகள்
இன்றும் இயேசுவை அறையத் துடிக்கும்
கள்வர் குகையான ஆலயங்கள்

அன்பே இறைவன்-உண்மையே அவர் பாதை
ஒளி தரும் தீயைத் தூண்டிவிட்டால் அதுவே அழிவின் வழி
அன்பின் வழியே அமைதி-அன்பு மனமே தெய்வீகம்

பரிபூரணமானது தானே ஒளிரும், மூட நம்பிக்கை
பகுத்தறிவை முடமாக்கும், உண்மையின் தேடல்
வாழ்வை வளமாக்கும், நம்பிக்கை நிரூபணத்தை
எதிர்பார்க்காது, உண்மையே விடுதலை அளிக்கும்

எல்லையில்லாதது இறை கருணை
நதி ஓர் நேர் கோட்டில் ஓடுவதில்லை
எற்றத் தாழ்வுகள் வளர்ச்சியின் படிகற்கள்
அன்பில் நிலைத்திருங்கள், அதுவே நம் சொந்த இயல்பு

நீரில் வாழும் மீன் தாகத்தால் தவிப்பதில்லை
அன்பில் வாழும் மனிதனுக்கு இறைவனே தந்தை
அலையற்ற மனம் ஆனந்த அமைதி தரும்

உலகின் ஒளி நீங்கள்-உலகின் உப்பு நீங்கள்
அனுபூதியில் அறிவதே உண்மை
அறிந்த கொள்ளும் உண்மை ஒன்றே
உன்னையே நீ அறிந்தால் நன்றே

உன்னில் ஒளியாய் இருப்பது என்றும் வாழும் சத்தியமே
நம்முள் உலவுாவும் பிராணன் இறைவனே


நம்பிக்கைகள் இரவலானவை
உண்மை ஒன்றே நம் சொந்தம்
மூட நம்பிக்கை படுகுழியில் வீழ்த்தும்

தன் நம்பிக்கை புயலிலும் அசையாத
ஆணிவேராகும்., உன் ஒளி ஒளிர்வதாக
தூய மனமே ஆனந்தம்-சச்சிதானந்தம் நாமே

ஆசை, ஆணவம், அறியாமையே துன்பம்
மரத்திலிருந்து விதை-விதையிலிருந்து மரம்
வாழ்கை வட்டம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-26-08-2023

பிரக்ஞானம் பிரம்மம்



தூய உள்ளுணர்வான பரப்பிரம்மம், ஆண், பெண், அலி
உருக்கடந்த மெய்பொருள், தம் உருவிலும், சாயலிலும்
ஆதி மனிதர்களை ஆணும், பெண்ணுமாய்ப் படைத்து
சிவசக்தியாய் ஆனந்தக் கூத்தாடிய அர்த்தநாரிஸ்வரன்




இருப்பே இறைவன், இருப்பவர் நாமே அவர் நாமம்
சகுண பிரம்மத்தில் உருவும், சாயலுமாய்
நிர்குணபிரம்மத்தில் அறிவு கடந்த பிரக்ஞானமாய் அது

படைப்பெல்லாம் அவன் அழகின் சாயலைச் சொல்ல
உண்மை, அன்பு, கருணை, ஞானம்
மாதா, பிதா, குரு, வடிவில் உறவாடிக் களிக்க
அன்பே சிவமாய், அறிவு கடந்த **பிரக்ஞானம் பிரம்மம்**

நம்மில் அவன் வாழ, நாமோ ஆணவத்தால்
அவனை மறுதலிக்க, சச்சித் ஆனந்தமான
அவன் இருப்பில்தான் மானுடருக்கு அமைதி?

அளவற்ற தம் அன்பைப் பகிர்ந்திட,
படைத்தலுக்கு மாட்சியாய்,
பல்கிப் பெருகி படைப்பை ஆண்டு நடத்திட
இறைவன் மனிதனைப் படைத்தார்



தம் கரங்களின் கைவண்ணத்தால் உருவாக்கி
தம் உயிர்மூச்சால் உயிர் கொடுத்துப்
படைப்பின் இறுதியில், படைப்பின் பெருமாண்பாக
மண்ணால் இறைவன் மனிதரைப் படைத்தார்

குனிந்து நடக்கும் விலங்குகள் மத்தியில் தலைநிமிர்ந்து
நடக்கும் மனிதன், படைப்பை காத்து, ஆண்டு நடத்திட
இறைவன் தேர்ந்த தலைவன்


உருவத்தில் மனிதனாய், உள்ளுணர்வின் உச்சத்தில்
இறைவனாய் மனிதன், மனிதன் இறைவனாவதே மீட்பு
அதுவே மெய்யறிவு-ஞானம்-நிர்வாணம்

கடவுளாக விரும்பி, அறிவுக்கனியை சுவைத்து
இருமை தோன்றிட , தன்னை இழந்த நிர்வாணி
ஏதேனிலிருந்து வெளியேற்றப்பட்ட ஏமாளி-ஆதாம்

அழியாத ஆன்மாவாய் , படைப்பை ஆண்டு நடத்தும் தலைவனாய்
வாழப் பிறந்தவன், விலக்கப்பட்ட அறிவுக்கனியை உண்டு
இன்பவனத்தை இழந்தான், வீட்டை மீண்டும் அடைந்திட-தன்னை
அறிதலே வழி, ஆணவம் கழித்து பூரண சரணாகதியே உயர் நெறி

Truths are not truth to you, unless you realize them within yourself.

Without realization they are just ideas. For spiritual perception spiritual consciousness lies not in vague theological ideas but in acquisition of Self-realization



தன்னை இழந்தவன், அழியாத ஆன்மா நான்
என்பதை மறந்தவன், அழியும் உடலை தனதாக்கி
நான் எனும் மாயையில் ஆணவம் வளர்த்து
தன் வலையில் தானே சிறைப்பட்ட மூடன்



மனிதன் அப்பத்தினால் மட்டுமன்றி-இறை மொழி
ஒவ்வொன்றினாலும் வாழ்கிறான்-உயிர் மெய்
கடந்து ஆன்ம தரிசனம் காணும் அரிய மொழி
பரி பூரண சரணாகதியே இயேசுவின் வழி

ஆணவத்தால் வீட்டை இழந்தவனோ ஆதாம்
பரிபூரண சரணாகதியில்-ஆணவம் கழித்து
வீட்டை அடைந்தவரோ, கிறிஸ்துவாய் தம்மை
தாதே பிறப்பித்த இயேசு (Christo Genesis)

மனிதன் இறைவனாவதே வாழ்கை வட்டம் -வழியும்,
உண்மையும், வாழ்வும் “ நானே” இயேசுவின் பாதை
துாய உள்ளுணர்வான “நானே” மனுமகன் கீதை

சத்தியத்தை சந்திக்க நாணிப் பயந்து ஒளிந்து
அத்தியிலைகளால் நிர்வாணத்தை மறைத்த ஆதாமோ ஏமாளி
ஆணவம் கழித்து, அரை நிர்வாணியாய், பரிபூரண
சரணாகதியில், வீட்டை அடைந்த இயேசுவோ ஞானி



உண்மையிலும், அன்பிலும், உண்மை இறைவனைத்
தொழுங்கள் அதுவே மெய் வழிபாடு-அக வழிபாடு
கட உள்ளே, நீங்களும் தெய்வங்களே-இன்றும் ஒலிக்கும்
இயேசுவின் குரல் மீட்பின் வழியான அமுதக் குறள்

மனிதன் உலகெல்லாம் ஆதாயமாக்கிக் கொண்டாலும்
தன்னை இழந்தால் என்ன பயன்?அழியாத ஆன்மா
நீங்கள், உன்னை நீயே அறிவாய்-அதுவே மீட்பு

நம்பிக்கை உண்மையை அறியத் தடைக்கல்லே
உண்மை தன் சொந்த அனுபவமாகாதவரை
இரவல் அறிவில் வாழும் மனிதன்-ஏழையே

வணங்கப்படுவது தெய்வமல்ல, தன்னுள் கடந்து-தன்னை
அறிந்து, இருமை மறைந்திட தோன்றும் மெய்யறிவே ஞானம்-
நிர்வாணம், ஆணவத்தை ஆகுதியாக்கும் அகவேள்வி
பூரண சரணாகதியில் நான் அழிய இருப்போடு ஒன்றாகும் ஆனந்தம்




அன்பில் நிலைத்து, உண்மையைத் தவமாக்கி வாழுங்கள்
ஆன்மாவை இழப்பதும், உண்மையை இழப்பதும் ஒன்றே
அனுபூதியில் நீங்களே உண்மையை அறிந்து கொள்ளுங்கள்-
தன்னை அறிவதே மெய்யறிவு-மற்றெல்லாம் தகவல் அறிவு
மெய்யறிவே பிரக்ஞானம் பிரம்மம்



நானும், தந்தையும் ஒன்றே
ஆபிரகாமிந்கு முன் நான் இருக்கிறேன்

தந்தையின் இல்லிடத்தில் உறைவிடங்கள் பல உண்டு-
நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்தபின்-திரும்பி வந்து
உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன்-அப்போது
'நான்'' இருக்குமிடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள்

வழியும், உண்மையும், வாழ்வும் ''நானே''
என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை



உள்ளுணர்வின் அதி உன்னதமே -தூய மனம்
சுத்த சைதன்யமே மெய்யான ''நான்''
உன்னதங்களில் இறைவனுக்கு மகிமையும்-பூவலகில்
நல்மனத்தவருக்கு அமைதியும்-வானவரின் நற்செய்தி
உன்னதமும, நல் மனதும் ஒன்றே- அது நம்முள்ளே

ஆணவம் கழித்த தூய மனமாய் பிறத்தலே
நம் இரண்டாம் பிறப்பு-அதுவே
இயேசுவின் இரண்டாம் வருகை அது நம்முள்ளே
கட உள் கடவுளாவீர்-இருப்பது தெய்வீகமே
அஹம் மிரம்மம் அஸ்மி-தத்துவமஸி

விழிப்புணர்வெனும் பெருங்கடலில் தோன்றிய
பேரலைகள், கிருஷ்ணா, புத்தர், இயேசு கிறிஸ்து
தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம்
எளிய மனத்தவருக்கே விண்ணரசு

எல்லாப் புகழும் இறைவனுக்கே
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
Pax Ravichandra-27-08-2023

புதிய போதகர் இலாசர்



விடியலின்றி இருண்டு கிடந்தது ஏழை இலாசரின் இதயம்.
உடலெங்கும் சொறி சிரங்கு அணியாக, பசியோ பெரும் பிணியாக,
நடைபாதையில் கிடந்த, நாதியற்ற ஏழையை நக்கி,
வாலையசைத்து உறவு சொன்னது- பெண், பறைநாயொன்று.

பசிவர மாத்திரையும், பாதி ராத்திரிவரை விருந்தும்
எடை குறையவும் , நோய் நீங்கவும் வைத்தியமாய்
வாழும் செல்வன் வாயிற்படி ஏழை இலாசரின் முகவரி

ஒரு பிடிச் சோற்றுக்காய் ஒட்டி உலர்ந்த வயிறோடு
இரந்து நின்ற இலாசருக்கு, பசிப்பிணி போக்கும் மருந்தாய்
ஏழைகளே நீங்கள் பாக்கியவான்கள்-ஏனெனில்
விண்ணரசு உங்களதே, ஒலிக்கும் இயேசுவின் வார்த்தைகள்

இல்லமே தொழுவமே ஆடிடத் தொட்டிலின்றி,
பிறந்த ஏழை, இறந்தபோது அடங்கிட கல்லறையின்றி-
இரவல் கல்லறை கொண்ட நாடோடிப் போதகன்

இறைமகன் விண்ணகம் சென்றபின், மனுமகன் சீடர்கள்
இறைமகனாய் அன்றித் திருமகனாய் உருமாறிய புதுமைகள்
எலும்புகள் முறிபடாமல் இறந்தவர் வார்த்தையை முறித்தும்
திரித்தும் உலகெங்கும் உருவான பல்லாயிரம் திருச்சபைகள்

பங்குச் சந்தையில் மதமாற்றம் உச்ச விலையைத் தொட்டிட
இலாசரும் மதம் மாறியே பிரிவினை திருச்சபையில் போதகரானர்
மதம் வியாபாரமாகிட வசதிகள் பெருகி, வாழ்க்கை மாறிட
முகவரி மாறிட, இலாசரும் செல்வரானார்

போதகர் லாசரின் பூட்டிய வாயிற் கதவில்
கடி நாய் கவனம் -எச்சரிக்கை பறைநாயை அச்சுறுத்திட,
நாய் தன் குட்டிகளோடு நடுத்தெருவில் நின்று
ஒரு பிடிச் சோற்றுக்காய் முனகியது.

நாய்களுக்கு மதங்களில்லை மாறிட,
வாலை ஆட்ட மறந்திட நன்றி மறந்திடும் மனமுமில்லை
நிலை மாறிட, மனம் மாறிடும் மனித உலகில்
நன்றி மறவா நாய்கள் பட்டினி கிடந்து சோர்ந்தன

அத்வைதவாதிகளுக்கு காவியும், சிலுவையும் எதற்கு?
சிலுவையும், உருத்திராட்சமும், நாமமும் -திரு நீறும்
வேடதாரிகளுக்கு என்றானபோது, தந்தையும் ''நானும்''
ஒன்றானவர்க்கு வேதங்களும், கீதையும் எதற்கு?

மதம் பிடித்த மனிதரால் உலகே எரிநரகாகிட
''மதம்'' பிடிக்காத விலங்குகள் வாழும் உலகம்-
இறைவன் உலாவிடும் ஏதேன் நந்தவனம்
மதவாத மனிதனுக்கு தெரியாத பிருந்தாவனம்

உயர் ஜாதி நாயோடு உலாப்போகும் போதகர் இலாசரை கண்டு
நன்றி மறவாமல், பறை நாய் இன்றும் வாலை ஆட்டுகிறது
ஏழைகளுக்கு பறை நாய், செல்வருக்கோ உயர் ஜாதி நாய்
படைத்தவன் படைப்பில் நாய்களுக்கும் சாதியத் தொல்லை

அன்பு உண்மையைத் தவமாக்கியவர் வாழ்வோ
மதமும் கோயிலும் கடந்த மெய்யான வழிபாடாகிட
நன்றி மறவாமை வாழ்வும் போதனையுமான
நாய்களுக்கு மதங்கள் எதற்கு?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra- 16-07-2023

புயலும் சிலையும்



கடும் புயல் வீசி பெருமழை பொழிய, உயிரினமழிய-
வாழ்விழந்த ஏழைகளோ இலட்சம்-மண்ணில் சாய்ந்த
கனியும் மரங்களோ பல இலட்சம்.

வங்கத்தின் சோகத்தை-மண்ணும், மரங்களும்,
மானிடமும் சொல்லியழ, வங்கக் கடலும் பொங்கியதற்காய்
குமுறியழ, புயலில் விழாது நின்ற சிலையை வாழ்த்தி
புதுமை எனப் புகழ்வது மதவாதிகளே மடத்தனம்

படைத்துக், காத்து, பராமரிப்பது கடவுள் என்றாள்
அழித்தது யார்? அன்பு இறைவன் எங்கே?
கடவுளும், சாத்தானும் மதங்களின் கற்பனையோ?
மதம் அபினியும், போதையும் என்பது மெய்தானோ?

எகிப்தியரை வதைத்து, எகிப்திய தெய்வங்களைப் பழித்து
யூதரை காத்த கதையோ புராணம்-சாலமோன் மன்னன்
கட்டிய ஆலயத்தை பாரோ தரை மட்டமாக்கியதும்
அறுபது இலட்சம் யூதரை-ஹிட்லர் வதைத்ததும் சரித்திரம்

நீதி தராசிற்கும் இருதட்டுக்கள், நிறைகளோ வேறு?
சாத்தானும், இறைவனும் இல்லாத சமயமேது?
எப்பொருள் யார், யார் வாய்க் கேட்பினும்-அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பது அறிவு, நமக்கு எப்போது?

பத்துக் கொள்ளை நோய்களும், உயிரியல், இரசயான
ஆயுதங்களே, மதப் பயங்கரவாதத்தின் கொடிய வடிவங்களே
யூத இறைவனே உலகின் முதல் பயங்கரவாதி?
அன்பு இறைவனுக்கு ஏனிந்த சாத்தானின் முகமூடி?

அப்பாவிச் குழந்தைகளைப் பரரோவும் கொன்றான்
தலைச்சன் பிள்ளைகளை யாவேயும் கொன்றார்
கண்ணுக்கு கண், பல்லுக்குப் பல் என்ன நீதி
வல்லமைதான் மாட்சிமை அராஜகத்தின் நியதி?

நல மனங்கள் மனம் வருந்திட, மதவாதம்
வல்ல செயல் எனப் பயங்கரவாதத்தைப் போற்றிட
மதமெங்கும் பிணவாடை, அகதிகளின்
விழிகளில் வற்றாத கண்ணீர் ஓடை

விழாத சிலையை விட, மடிந்த உயிர்களுக்காய்-
மரங்களுக்காய், அழிந்த மண்ணிற்காய் வாழ்விற்காய்
அழுவதும், துளி கண்ணீர் சிந்துவது மதப்பண்பு-
நல்ல சமாரியனாய் கை கொடுப்பது இறையன்பு



ஓ மதவெறியரே! கடும் புயலில்
உயிர்களுக்குத்தான் ஜனனம், மரணம்
உயிரில்லா கற்பாறைகளுக்கு ஏது மரணம்.

வீழாத கற்சிலை புதுமை என்றாள்-குண்டடிபட்டுச் சிதைந்த
ஆலயங்களில் மடிந்த பக்தர்களின் நம்பிக்கைகள் பொய்யோ?
வழிபட்ட தெய்வங்கள் கற்சிலைகள் என்பதும் மெய்யே?
சீலோவாம் கோபுரம் இடிந்த கதை- தெரியாத கதையா-வேடிக்கை?

கல்லான சிலை கடும் புயலில் விழாதது புதுமை என்றால்
கடவுளின் அன்னை என்ற நிலையில் பிள்ளைகளின் உயிர்களைக்
காக்கத் தவறியது, புதுமையிலும் புதுமையன்றோ?

இயற்கை அழிவுகள் புதுமையில்லை
அன்பே பெரும் புதுமை
விழாத சிலைகள் புதுமையில்லை-எழுந்திட
தூக்கி விடும் கரங்களே புதுமை

மதவாதம் கண்டே மனம் நொந்தேன்
அன்பே தெய்வம் என்பதை உணர்ந்தே மகிழ்ந்தேன்
மதங்களைத் துறந்தேன், மனிதத்தை பூஜித்தேன்

புயலினும், மழையினும் உயிர்கள் மடிய
காக்க வழியின்றி அன்னையும்
கல்லாய் சிலையாய் மாறியதில் வியப்பில்லை
மதவாதம் புதுமை என்பதில் புதுமையில்லை

உயிர்கள் மடியும்போது, சிலைகள் நிற்பதும்
புதைகுழிகள் தலைமாட்டில் சிலுவைகளை நடுவதும்
பெருமையில்லை, வரலாற்றில் வல்லரசுகளாய்
வாழ்ந்த மதங்கள் சிந்தியதோ குருதிக்கு அளவில்லை

கடும் புயலும் , பெருமழையும், சாய்த்த மரமும்
அன்னையை -காயப்படுத்வில்லை-புயலுக்கும்,
மழைக்கும், மரத்திற்கும் தெரிந்த மத அபிமானம்
கோயில்களையும், சிலைகளையும் இடிக்கும்
மதப்பயங்கரவாதிகளுக்குத் தெரியவில்லை

மழையிலும் புயலிலும் மரங்கள் விழுந்தும்
விழாத கற்சிலைக்கு, மதவாதி பூசும் சாயமோ புது மை?
புயலழித்த உயிர்களுக்கு இறைவனும் குருதிச்சாயம் பூசிட
உறவுகளின் முகத்தில் கண்ணீர் சாயம்
கனக்கும் நெஞ்சில் கறையாய் சோகச்சாயம்

புயலும், மழையும், மரமும்-அன்னையின்
சிலையை வீழ்தாதது அவற்றிற்குப் பெருமை,
மடிந்த உயிர்களாலும், அழிந்த உடமைகளாலும்
காக்கும் இறைவனுக்கோ மாறாத சிறுமை

கல்லான சிலையை புரட்டுவதால்
காற்றுக்கும், மழைக்கும், மரத்திற்கும் என்ன பெருமை?
கல்லான மனங்களை புரட்டாத கடவுளால்
மதங்களுக்கோ மாறாத சிறுமை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-29-06-2023

சாதுவும் சீடரும்

பெய்யும் மழையும், பெருங் காற்றும் வையகத்தை மிரளவைக்கும்
பிரளயமாக, வெட்டும் மின்னலும்,வெடிக்கும் பேரிடியும் அரக்கனாய்
அச்சுறுத்த, பசியும் களைப்பும் வருத்தும் உறவாக,ஈர உடையும்
களைத்த உடலும் பெருஞ் சுமையாக , பிரான்சிஸ் அசிசியும்
சீடர் லியோவும் தொடர்ந்தனர் தம் பயணத்தை

குரு வினவினார் தம் சீடரிடம்
லியோ உண்மையான சாது யார்?

அந்தகர்க்கு பார்வையும், துன்புறும் நோயாளிக்கு நலமும்,
இறந்தவர்க்கு உயிரும் அளிப்பவர் உண்மையான சாது இல்லை

மண்ணின் மொழியும்-மரங்களின் மொழியும்
விண்ணின் மொழியும் விலங்கின் மொழியும் அறிந்தவரும் அல்ல
கடல்மேல் நடந்து, காற்றில் மிதப்பவரும் யோகி அல்ல

அமைதி நிலவிட, குருவும் சீடரும் நடந்தனர்.
நகரோ தொலைவில் ஒளிர -பிரான்சிஸ் மொழிந்தார்
பெருஞ்சொத்தும், சுகமும் துறந்தவரும் சாது அல்ல

பசியும் களைப்பும் வாட்டிட, சீடர் வினவினார்
அப்படியென்றால் யார்தான் சாது?

ஊரை நெருங்கிவிட்டோம் விருந்தோம்பிட-எமக்கோ உறவுகள்
யாருமில்லை: விடாமல் விடுதியின் கதவுகளை தட்டி உம் உறவினர்
ஏழைகள் இருவர் வந்துள்ளோம், பசியாற உணவும், களைப்பாற
இடமும் தந்து அருள் கூருங்கள் என்று இரஞ்சுவோம்

விடுதி உரிமையாளரோ பிச்சைகாரரே, இரந்துண்ணும் சோம்பேறிகளே
உணவில்லை, இடமில்லை இங்கிருந்து ஓடி விடுங்கள், எம்மை விரட்டி
கதவை மூடுவாராகில், மழையும் புயலும், பசியும் களைப்பும்,
எம்மை வாட்டிட, மீண்டும் தட்டுவோம் மனமிரங்கிக் கதவைத் திறப்பார்
மனமுவந்து எம்மையும் விருந்தாய் ஏற்பார் என்று

உரிமையாளரோ தடியெடுத்து நம்மை விரட்டி
தடிப்பயல்களே போக்கிரிகளே
நள்ளிரவில் தொந்தரவு செய்யாமல் போய்விடுங்கள்
விரட்டி, மீண்டும் கதவையடைப்பார்

ஒன்றும் தோன்றாத நிலையில், சூனியத்தில்
மனம் இலயிக்க பேரமைதியில் மனம் களிக்க-
பிரபுவாய் விடுதி உரிமையாளரை மனம் துதிக்க
தோன்றும் உளநிலையே உண்மை சாதுநிலை

எச் சூழலிலும் எவ்விடர் நேரிடினும், அமைதியும், எளிமையும்
அகங்கார நிலையழிந்த அன்பு உள்ளமும் யாரிடமுண்டோ
அவரே மெய்யான துறவி அன்புடன் பகர்ந்தே
பயணத்தை தொடர்ந்தார் துறவி பிரான்சிஸ் அசிசி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra- 16-07-2023

சாரமற்ற உப்பு






“இதோ மனிதன்”
சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும்
யூத மதவாதம் தூண்டிய கோஷம்
இரத்தவெறியர்களின் ஆவேசம்

தந்தையே தாம் செய்வது இன்னதென்று
இவர்கள் அறியார்- இவர்களை மன்னியும்
தம்மைக் வதைப்போரையும் மன்னிக்கத் தந்தையை வேண்டிய
மனுமகன், காலடியில் அழுது நின்ற அன்னை,
அன்று சொன்னதோ “அவர் சொல்வதைச் செய்யுங்கள்”





“Do not believe in anything simply because you have heard it. Do not believe in anything simply because it is spoken and rumored by many. Do not believe in anything simply because it is found written in your religious books. Do not believe in anything merely on the authority of your teachers and elders. Do not believe in traditions because they have been handed down for many generations. But after observation and analysis, when you find that anything agrees with reason and is conducive to the good and benefit of one and all, then accept it and live up to it.”

கொலையை இரட்சணிய இயலாக்கிய சவுல்
“இயேசு நம் பாவங்களுக்காய் மரித்தார்”
பொய்யில் வாழும் மதமோ கிறிஸ்தவம்


தம் பாவங்களுக்காய் தந்தையாம் இறைவன்
மனுமகனைக் கொல்லுமளவிற்கு நரபலி கேட்கும்
கொடிய கடவுளல்ல-அன்பே சிவம் பொய்யல்ல

வழி தவறியது யூதம், நெறி பிறழ்ந்த கிறிஸ்தவம்-
இரண்டையும் புறந்தள்ளி-அல்லா
அருளிய புது மதமாய் இஸ்லாம்

சிலுவை யுத்தம் தொடங்கிய கிறிஸ்தவம்,
அழுகைச் சுவர், அல்-அக்ஸா பள்ளியில் ஓதியும்
ஓயாத மதமோதல்கள்-வல்லமையே
ஆண்டவன் வழிபடும் புது வேதங்கள்



வாக்களிக்கப்பட்ட வளநாடோ யுத்த பூமி-
உன்னதங்களில் இறைவனுக்கு மகிமை-உலகில்
நல்மனத்தவருக்கு அமைதி-வானவர் நற்செய்தி


7.எவர்களின் மீது நீ அருள் புரிந்தாயோ அத்தகையோரின் வழி(யில் நடத்துவாயாக).
(அது உன்) கோபத்திற்குள்ளானவர்கள-(ான யூதர்களின் வழிய)ல்ல; அன்றியும், வழிகேடர்கள(ான கிருஸ்துவர்களின் வழியும)ல்ல.

உண்மையே உனக்கு விடுதலையளிக்கும்
உண்மை, அன்பை வாழ்வாக்கி வாழ்தலே-மெய்யான
அக வழிபாடு, இயேசுவின் மாறாத போதனை-
சாரமற்ற உப்பான மதங்களோ சாலையில்
மிதிபட மனதிலே வேதனை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-24-08-2023

சத்தியம் சிவம் சுந்தரம்

அவர் என் வாயை- கூர்மையான பட்டயமாக்கி
தம் கரத்தின் நிழலில் எனை மறைத்து
என்னைத் துலக்கமான அம்பாக்கி
தம் அம்பறாத்துணியில் மறைத்து வைத்தார்.

அருளும் திருவும் ஐயுற இணைந்த அருட்திருக்களே
அருள் காணாவிடினும்-தங்களில்
“திரு” காணும் பாக்கியம் தினம் எமக்கு

தந்தை தாய் சுற்றம் துறந்து முக்தி தேடும் பாதையில்
முந்திச் செல்பவர்கள் நீங்கள், உங்கள் ஆன்மீக வெளிச்சத்தால்
எங்கள் இருண்ட பாதைகள் ஒளி பெற்றன
உங்கள் அடிச்சுவடுகளை தொடர்வதால் கரையேறலாம்
என்ற நம்பிக்கை காலா காலமாய்-எமக்கு

நீங்கள் முந்தி போனதாலோ, இல்லை
நாம் “விழிப்புணர்வு” அற்றுப்போனதாலோ-எங்கள்
விசுவாச பயணத்தில் பெரும் தளர்ச்சி இன்று

பிள்ளை பெறாத உதரங்களும், பாலூட்டாத கொங்கைகளும்
பேறுபெற்ற காலமிது, அகால மரணங்களும்
அநீத சித்திரவதைகளும், நுழையாத இல்லங்கள்
இங்கு ஏதுமில்லை, காலம் கடந்த காலன் வர
காலமில்லாக் காலமிங்கு.

ஆதலால் எங்களுக்கு நம்பிக்கையூட்டவல்ல நற்செய்தியை
நாளும், எதிர்பார்த்து காத்திருந்தோம்.-ஏமாந்தோம்
நலிந்துபோன “தொண்டனும்”, விடியல் காணா “வெட்டாப்பும்”
சாரமற்ற உப்பாய்- சலிப்பூட்ட வெற்றுச் சடங்குகளும்
வேத மந்திரங்களும், எமக்கு விரக்தியளிக்கின்றன

ஆலய முன்றலில் ஆன்மீகக் கடைவிரிக்கும் வியாபாரிகளே
காய்காத அத்தி மரக்கன்றுகளையும், சாரமற்ற உப்பையும்
விற்பதுதான் ஆன்மீகமா?

அதிகார ஆசையினால் இறைவனை மறந்து
சபைகளை பிரித்து பிரிவினை வளர்த்து
அதிகாரமும் செல்வமும் வழங்கிடும் “செல்லா- வாக்கை”
அறுத்துச் சேர்த்திட வெற்று களஞ்சியங்களை
இடித்து கட்டும் வியாபாரிகளே, இன்றைய நாள்
உங்கள் இறுதி நாளாகலாம்

விடியல் உங்களுக்கில்லை, நீங்கள் “விழிப்புணர்வு” பெறும் வரை
“உயிர்ப்பு” உங்களுக்கில்லை, “இலாசர்களே”
இறைமகன் உங்களை, “பெயர் சொல்லி” அழைக்கும் வரை
எனவே மனந்திரும்புங்கள்

வெண்ணாடை மூடிய, நிர்வாணத்தை மறைக்க
அதி வந்தணைக்குரிய ஆண்டகை பட்டங்கள்
பாலியலும், பணமும், சிறுவர் துஷ்பிரயோகமும்
ஆடம்பரமும் அதிகார வெறியும்
உங்கள் பாவங்களும், பலவீனங்களும்

வங்கிரோத்து திருச்சபையே, வங்கி கணக்கை பெருக்கிடவா
புனிதர் சிலைகளையும், ஆடைத்துண்டுகளையும்
ஆராதிக்க வேண்டுகின்றாய்∴, மூட நம்பிக்கைகளும்
சிலை வழிபாடுகளும்- விசுவாச வாழ்வைச் சீரழித்திட
அசிங்க நிர்வாணத்தை மூடிட, புதிதாய் கண்டு பிடித்த
அத்தி இலைகளோ இந்த மாற்று வழிபாடுகள்.

ஆதாம் ஏவாளாய் ஏதேன் தோட்டத்தில்
ஒளிந்த வாழும் ஏமாளிகளே என் இறைவன் வருவான்
நீ எங்கே இருக்கிறாய் எனக் கேட்டால்
என்ன பதில் சொல்வாய்?

“நீ எங்கிருக்கின்றாய்?”என்பதன் அர்தம் புரியாத
போலிகளே “சிந்தனையற்ற விழிப்புணர்வு”
உன் ‘இருப்பு” நீங்கள் அறியாத ஒன்று.

தியானமும் விழிப்புணர்வும், நீங்கள் புரியாத ஒன்றாகிட
செபமோ-பிச்சை கேட்கும் அவலமாய் ஒலிக்கும் துயரம்
ஓ ஆன்மீக வியாபாரிகளே ஆழமற்ற கடலில்
பொத்தல் வலைகளோடு உங்கள் நாறும் பிழைப்பு

உங்கள் கற்போ, சாரமற்ற உப்பாய், கீழ்படிவோ
அடிமைத்தனமாய், ஏழ்மையோ-இறைமகனையே
விலைபேசும் வியாபாரமாய் மாறிய அவலம்.

இன்றும் யூதாஸிடம் பணப்பை, பேதுறுவிடம் வாள்
யோவானிடம் அதிகார வர்க்கத்தின் செல்வாக்கு
பவுலிடம் திசைமாறிய இறையியல்.

திசைமாறிய பயணிகளே, திரும்புங்கள்
உங்கள் "மையத்திற்கு" அங்கிகள் தரித்து
அபிஷேகம் பெற்று ஆயிரம்பேர்
அருட்திருவாகலாம்-ஆயினும்

**ஞான விளக்கை ஒரு தலைமுறையிலிருந்து
மறு தலைமுறைக்கு எடுத்தச் செல்பவரே
மெய் துறவி, ஞான குரு, ஏனையவரெல்லாம்
"காவிகள் சுமக்கும்போலிகளே"
கற்ற மந்திரம் ஒப்புவிக்கும் "கிளிப்பிள்ளைகளே"**
'

சத்திய தரிசனம்

சத்தியத்திற்கு சாட்சியமாய் மதங்களில்லை
சத்தியத்திற்கு சான்று பகிரத் சபைகளிடம் துணிச்சலில்லை
தெருவெங்கும் சபைகளாக கிறிஸ்தவமோ மலிந்த வியாபாரம்
மானுடத்தை பிரித்து, மெய்யறிவுக்கு தடை போடும் ஆரவாரம்




இறைவன் மதங்களைப் படைக்கவில்லை- மெய் இறைவனுக்கு
மதங்கள் தேவையில்லை, ஏற்பிற்கும், மறுப்பிற்கும்
இருமைக்கு வெளியே -“இருப்பு”



தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம், எளிய மனத்தவருக்கே இறையரசு
சத்தியத்தை அறியத் தத்துவங்கள் தேவையில்லை, வேதங்களும்,
நம்பிக்கையும, போதகனும் வேண்டியதில்லை , குருடனுக்கே கோல்கள்

சத்தியத்திற்கு நாம, ரூபமில்லை, கோயில்களுமில்லை
சத்தியத்தை உரைக்க வார்த்தைகளில்லை, சாதி, மத, நிற. இன
பேதங்களில்லை, சேவல் கூவி பொழுது புலர்வதில்லை


சமயங்களின் மாயையில் சித்தனும், ஞானியும் சிக்குவதில்லை
அன்பினால் கனிந்தவனே பக்தன், சத்தியத்தின் பாதையில் நடப்பவனே
அரிச்சந்திரன்-அவனே இயேசு, புத்தர், கிருஷ்ணன்



மதவாத யானைகளாய் போலித் திருச்சபைகள்
நாமமும், நீறும், சிலுவையும், தொப்பியும்-வேஷங்கள்
அழுகைச்சுவரும், க∴பாவும் மனிதனின் வேலைப்பாடு
“கிறிஸ்து வருகிறார்” மதவாதிகளின் கூப்பாடு



அன்பினால் இன்புறுவதை-அச்சத்தால் வணங்குவது கேலிக்கை
சத்தியம், அன்பு சமதர்மமும், இரக்கம் , மன்னிப்பு இறை தன்மை
நீயே கிறிஸ்து, நீயே புத்தன்- உன்னை அறிந்தல் புரியும் உண்மை



இயேசுவை கொன்றதோ மதவாதம்-இயேசு
நம் பாவங்களுக்காய் பலியானர் என்பதோ விதண்டாவாதம்

மழைக்கு முளைத்த காளான்களாய் சபைகள்
“இயேசு வருகிறார்” “இயேசுவின் இரத்தம் ஜெயம்”
கோஷங்களோ மதவாத வேசித்தனம்-
உண்மையே விடுதலையளிக்கும் மாறாத சத்தியம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-29-06-2023

சத்திய வேள்வி

ஓ யுக புருஷர்களே!, வாருங்கள், அக இருள் ஒழித்து
புது ஒளி பிறந்திட, ஆணவத்தை ஆகுதியாக்கி
அன்பு, அமைதியை வரமாக்கிட -சகோதரர் நாம்
ஒன்றினைந்து யாப்போம் சத்திய வேள்வி ஒன்றை

ஒடுக்கப்பட்ட மானுடம் விடுதலைபெற
நசுக்கப்பட்ட மனித உரிமைகள் துளிர்த்து எழு
இன, மத, மொழி, கடந்து பிளவு பட்ட மானுடம்
ஒன்றுபட யாப்போம் புனித வேள்வி

ஒன்றே குலம் ஒருவனே தேவன்
யாதும் ஊரே, யாவரும் கேளீர் என்று முழங்கி
ஒன்றுமைக்கு குரல் கொடுப்போம்.-எல்லோரும்
இந்நாட்டு மன்னர் என்றே விழாவெடுப்போம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra- 16-07-2023